




Registered as a Newspaper in Sri Lanka

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே! - பாரதி.




இதழ் - 6 ஜனவரி - பெப்ரவரி 1991. விலை : 5/=

# தீர்வை முன்வையுங்கள்!

தமிழீழ விடுதலைப் புலிகளால் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்ட போர்நிறுத்தம் ஒரு வார கால இடைவெளிக்குப் பின் அரசினால் முடித்து வைக்கப்பட்டது. இந்த ஒரு வார காலத்தில் புலிகள் 34 யுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தம்மை மேலும் பலப்படுத்துவதில் அவர்கள்தீவிரமாக இறங்கியுள்ளதையும் தாம் அவதானித்ததைத் தொடர்ந்தே யுத்த நிறுத்தத்தை தாம் தொடர்ந்து கடைப்பிடிப்பதில்லை என அரசு அறிவித்துள்ளது. புலிகள் தரப்பிலிருந்தும் அரசு முப்பதுக்கு மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவ ரீதியான பலவீனமும், அரசியல் ரீதியான நெருக்கடிகளும் காரணமாக தம்மை மீளப்பலப்படுத்திக் கொள்ள முயலும் நோக்குடனேயே புலிகள் இந்த யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளதாக கூறிய அரசு, தமது தொடர்ச்சியான ஆயுத நடவடிக்கைகள் மூலம் புலிகளை அடி பணிய வைக்கப் போவதாகவும் சூளுரைத்துள்ளது.

ஆனால் புலிகளோ , தாம் தொடர்ந்தும் போர் நிறுத்தத்தை கடைப் பிடிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

அரசு, புலிகளின் போர் நிறுத்த இடைக் காலத்தில் அனைத்துக் கட்சிகளையும் கூட்டி திரும்பவும் போரை நடாத்துவதற்கான அங்கீகாரத்தை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. ஐ.நா. சபையினது ஆதரவுடன் ஈராக்கை தாக்க அமெரிக்கா முனைவது போல தனது நோக்கத்திற்கு அனைவரையும் உடந்தையாக்குவதன் மூலம், இதனால் வரப் போகும் விளைவுகட்கு அனைத்து' கட்சிகளையும் பொறுப்பேற்க வைக்கும் அரசியல் வெற்றியை அரசு பெற்றுள்ளது.

ஆயுதங்களை போட்டு விட்டு பேச வந்தால் மட்டுமே பேசுவோம் என அறிவித்துள்ள அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு என்ன என்பது பற்றி எதுவுமே பேசவில்லை. புலிகளுடன் போரிடுவதும், பேசுவதும் அரசினால் "பயங்கரவாதிகள்" என வர்ணிக்கப்படும் அவர்களை வழிக்கு கொண்டுவரும் நடவடிக்கையே அன்றி மக்களது பிரச்சினைகளுக்கு முன் வைக்கப்படும் தீர்வா என்பது சரியாக தெளிவுபடுத்தப்படவில்லை. புலிகளை வெறும் "பயங்கரவாத குழு" என வர்ணித்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு பற்றி அவர்களுடன் ஏன் பேச வேண்டும்? அவர்களுடன் பேசாமலே தீர்வினை முன் வைக்க முடியுமே?

உண்மையில் அரசும், அரசுடன் சார்ந்துள்ள பிற கட்சிகளும் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டுவதை விட புலிகளை அழிப்பதிலேயே அக்கறை காட்டுவதாக தெரிகிறது. ஒரு வேளை புலிகளை அழித்து விட்டால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்ந்து விடும் என்பது அவர்களது தீர்வாக இருக்கக் கூடும்.

ஆனால், எமது கருத்து என்னவோ நேர் எதிரானது. புலிகளை "பாசிஸ்டு வெறியர்கள்" என் திட்டிக் கொள்கிற தமிழ் குழுக்கள்-கட்சிகள்-க்ம் சரி, அரசும் சரி, தமது தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காமல் இருக்கும்வரை, அல்லது புலிகளை அழிப்பதே அத்தீர்வு என கருதும் வரை, அது பலஸ்தீனப் பிரச்சினைக்கு பதில் ஈராக்கை அடிபணிய வைப்பது என்று சொல்வது போல சம்பந்தமற்றதாகவே இருக்கிறது.

நாம் திரும்பத், திரும்பச் சுட்டிக் காட்டியது போல், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதிலேயே பிரச்சினைக்கான தீர்வு ஆரம்பமாக முடியும். புலிகள் பலமாகவோ பலவீனமாகவோ இருக்கிறார்கள் என்பதே இத்தீர்வை அறிவிப்பதற்கான முடிவைத் தீர்மானிக்கும் என்றால், உண்மையில் அரசுக்கோ, சார்ந்து நிற்கும் கட்சிகட்கோ, பிரச்சினை பற்றி அக்கறை இல்லை என்றே பொருள்படும். "அக்கறை இல்லாதது" தான் இவ்வளவு மோசமான நிலைமைகளுக்கும் காரணம் !

சுய நிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டு தீர்வை முன் வையுங்கள். புலிகளுடனோ, யாருடனோ பேசுவதை அதன் பிறகு வைத்துக் கொள்ளலாம். பேசிய பின் தீர்வு பற்றி யோசிக்க இது ஒன்றும் திடீரென்று வந்து குதித்த திடீர் பிரச்சினை அல்ல!



# மீண்டும் உக்கிரமான குண்டு வீச்சு!

## வல்வெட்டித்துறையில் 7 பொதுமக்கள் பலி 23 பேர் காயம்

(ராய்ட்டர்)

கொழும்பு,

முழு நாள் ஊரடங்கு அமுலிலிருந்த நாளாகிய கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித் துறையில் ஆகாய மார்க்கமாக இலங்கை படையினர் மேற் கொண்ட தாக்குதலில் 7 பொது மக்கள் கொல்லப்பட்டதாகவும் 23 பேர் காயமடைந்ததாயும் தமிழீழ விடுதலைப் புலிகள் லண்டனிலிருந்த விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.-

இங்கு 100க்கு மேற்பட்ட வீடுகள், கடைகள், பாடசாலை கட்டிடங்கள், இந்த ஆலயங்கள் பல சேதமடைந்துள்ளதாயும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச சமுதாயத்தின் கவனமெல்லாம் வளைகுடாவின் பக்கம் இருக்கும் இந்த உலக நிலையை பயன்படுத்தி, இலங்கை அரசு இராணுவ வெற்றி ஒன்றை காணத் துடியாய்த் துடிக்கிறது" என்றும் அந்த அறிக்கை கூறு கிறது.

### குண்டுத் தாக்குதல்

மேலும் கிளிநொச்சி, கரடி போக்குப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள் ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் பல கட்டிடங்கள் சேதமடைந்த துடன் நால்வர் காயத்திற்குள் ளானதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக் கின்றன.

## முல்லைத்தீவு பகுதியில் நேற்று குண்டு வீச்சு

(வவுனியா நிருபர்)

வடக்கிலும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களி லும் கடந்த சனிக்கிழமை முதல் பொம்பர் குண்டுத் தாக்குதல்கள் பரவலாக இடம்பெறு வருவதாக வவுனியாவுக்குக் கிடைத் திருக்கும் செய்திகள் தெரி விக்கின்றன.

முல்லைத்தீவு, கனக ராயன் குளம், நெடுங் கேணிப் பகுதியில் நேற்றுக் காலை பலத்த குண்டு தாக்குதல் இடம் பெற்ற போதிலும் சேத விபரங்கள் உடன் தெரியவில்லை.

சனியன்று மடுக் கோவில் முகாமைச் சுற்றியும் பன்றிவிரிச்சான், பெரிய தம்பனை பகுதிகளிலும் பொம்மர்கள் தாழப் பறந்து குண்டு வீசியதாக அங்கிருந்து வந்த மக்கள் தெரிவித்த னர். இதனால் வீடுகள், கடை கள் பலத்த சேதத்துக்குள் ளாகியதாக தெரிய வரு கிறது.

ஞாயிறன்று வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியில் இடம் பெற்ற குண்டு வீச்சில் 5 கடைகள், வீடுகள் சேதமடைந்ததுடன் 15 மாடுகள் பலியாகின.

முகாமையாளர் மகேந் திரன் என்பவரின் வீடும் மத்திய வைத்தியசாலை விடுதியும் நிர்மூலமானதாக தெரியவருகிறது.

மூன்று தொடக்கம் நான்கு பொம்மர்கள் இத் தாக்குதலில் ஈடுபட்டு வருவ தாகவும் மக்கள் கூறுகின்ற னர்.

நன்றி: வீரகேசரி 23.01.91



# கொழும்பு அகதிகளின் அவலம்!

# யார்தான் பொறுப்பு?

கொழும்பு மாநகரின் கனத்தை மயானம்; மூசாந்து போன ஒரு மாலைப் பொழுது; பல நூறு கல்லறைகளால் நிறைந்திருக்கும் அம்மயாத்தின் கிழக்குப்புற மூலை; இரு சிறு கிளைகள் கொண்ட ஒரு மரம்; அதன் அடியில் ஒன்றரை அடி நீளமான ஒரு சவப்பெட்டி. அதனுள் ஒரு சிறு குழந்தை; அருகில் அழவும் முடியாமல் களைத்தும், திகைத்தும் அலமந்தும் போன இளம் தாய். அவளது மெலிந்த உடல் நடுங்குகிறது. வரண்டுபோன கண்கள் குழந்தையை வெறிக்கின்றன. சுற்றி இன்னும் சிலர்.விவரிக்க முடியாத சோகம் படிந்த அவர்கள் முகங்களிலும் அடுத்தது என்ற கேள்வியும் ஏக்கமும்.

இறந்த குழந்தை கொழும்பில் அதிகம் தெரியப்படாத அகதி முகாம்களில் ஒன்றில் வசிக்கும் தாயினுடையது. தாய் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவள். கணவன் அவளுடன் இல்லை. நிமோனியா நோயினால் குழந்தை இறந்தது. உரிய நேரத்தில் தகுந்த மருத்துவ வசதி கிடைத்திருக்குமானால் குழந்தை பிழைத்திருக்கும்.

1990 ஜுலை மாதத்திலிருந்து கொழும்பில் அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன. தற்போது உத்தியோக பூர்வமான 12 அகதி முகாம்கள் கொழும்பில் உள்ளன. சுமார் 4000 பேர்கள் இவற்றில் உள்ளனர். வஞ்சகமில்லாமல் மூன்று இனத்தவர்களும் –தமிழ், சிங்கள, முஸ்லிம்கள்– அகதிகளாக உள்ளனர். இவற்றின் விபரம் சமூக சேவைத் திணைக்களத்தின் டிசெம்பர் மாதக் கணக்கெடுப்பின் படி பின்வருமாறு–

பொதுவாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள அகதிகள் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது கொழும்பிலுள்ளவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே நாடு முழுவதிலும் 1.2 மில்லியன் மக்கள் அகதிகளாக உள்ளனர். அதாவது ஒவ்வொரு 16 இலங்கையருக்கும் ஒருவ்ர் அகதியாக உள்ளார். எனினும் கொழும்பில் இந்த நிலைமை மறைக்கப்பட்டதாகவே உள்ளது. ஒரு சிலரைத் தவிர, ஒரு சில ஸ்தாபனங்களைத் தவிர ஏனையோருக்கு இந்த அகதி முகாம்களின் "இருப்பு" பற்றித் தெரியாது.

கொழும்பிலுள்ள அகதிகளில் பெரும்பாலோர் கிழக்கிலங்கைத் தமிழ் மக்கள். சுமார் 5 மாதங்களாக அகதி வாழ்க்கை வாழும் இவர்கள் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் அப்பகுதியை அண்டிய காடுகளிலும் தஞ்சம் புகுந்தவர்களில் ஒருபகுதியினர். பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் ஆண்கள்? பெரும்பாலும் காணமற் போய்விட்டார்கள்.

**மாயா**

இந்த முகாம்களின் நிலையோ மோசம். ஈரம்; நெருக்கடி; ஓயாத இரைச்சல், சாதாரணமாக ஒரு குடும்பம் (13 சிறுபிள்ளைகள் 2 பெரியவர்கள்) 6'x4' சதுரத்துக்குள்ளேயே வாழ்கிறது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் இந்த முகாம்களில் தொற்று நோய்கள் ஏற்பட்டன. கண்வருத்தம், காய்ச்சல், பொக்குளிப்பான் என்று மிக விரைவில் பலருக்கும் பரவின. நெருக்கடியும் தகுந்த சுகாதார வசதியும் இல்லாத உணவு. (இங்கு 3 நேரம் வழங்கப்படும் சமைத்த உணவு பற்றிக் கதை எழுதலாம். ஒரு நாள் காலையில் ஒரு குறிப்பிட்ட முகாமில் பாணுடன் வழங்கப்பட்ட கடலைக் கறியில் புழுக்கள் இருந்ததை நான் பார்த்தேன். ) யாவும் சேர்ந்து நோய் எதிர்ப்புச் சக்தியையே குறைத்து விட்டன. முகாம்களில் 90 வீதத்திற்கு அதிகமானோர் இத்தொற்று நோய்கட்கு ஆளாகினர். பொக்குளிப்பான் கண்ட பெண்களில் கர்ப்பிணிகளும் அடங்குவர்.

வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அகதி முகாம்களில் உள்ளோர் கொழும்பில் உள்ளோரை விட மோசமாக துன்பங்களை அனுபவிக்கின்றனர். பட்டினியால் இறக்கின்றனர். பாம்புக்கடிக்கு ஆளாகின்றனர். அது பற்றிக் கதைக்காமல் என்ன கொழும்பு அகதிகள் பற்றி அங்கலாய்ப்பு என்று சிலர் கூறலாம்.

கிழக்கு வாழ் அகதிகளின் துயரம் கொழும்பு வாழ் அகதிகளின் துயரங்களை எவ்வகையிலும் நியாயப்படுத்தாது. வடக்கிலும் கிழக்கிலும் போர் நடக்கிறது. நிவாரணப் பணிகளுக்கு இது தடங்கலாக உள்ளது. ஆனால் கொழும்பில் என்ன வாழ்கிறது.?

சுப்பர் மார்க்கட்டுகள்,கஸினோ களியாட்ட விடுதிகள், உல்லாசப் பொழுது போக்குகள், பணத்தை தண்ணீராக இறைக்கும் வெளிநாட்டு நிதி உதவி நிறுவனங்கள் ....... இவற்றுக்கு மத்தியில் எந்த வித அடிப்படை வாழ்க்கை வசதிகள், மனிதருக்குரிய கௌரவம் என்பவற்றை இழந்து போய் ஏன் இந்த அகதிகள் வாழ வேண்டும்? இவர்களது அவல நிலைக்கு அரசும் மக்களுமே பொறுப்பு எற்க வேண்டும். போதுமான மருத்துவ வசதி உரிய காலத்தில் கிடைக்காமல் அந்தச் சிறு குழந்தை சத்திய மலர் கருகிப் போனதற்கு நாம்தான் பொறுப்பு.

கொழும்பு வாழ் தமிழர்களின் சூடு சொரணையற்ற முதலைத்தோல் போர்த்திய மனோபாவம் இந்த அகதிகளைப் பொறுத்த மட்டில் நன்கு தெரிகிறது. சில உதாரணங்கள் தருகிறேன்.

1) குறிப்பிட்ட ஒரு அகதி முகாம் மக்கள் சேவையையும் தியாகத்தையும் போதித்த வீரத் துறவியின் பேரில் உள்ள சபையின் மண்டபத்தில் இயங்குகிறது. இந்த மண்டபம் உள்ள வளவில் வேறும் தனி அறைகள், மண்டபம் என்பன இருந்தன பூட்டப்பட்டு சும்மா இருந்தன; ஏறக்குறைய 500 அளவிலான ஆண்,பெண், குழந்தைகள் அடங்கிய அகதி கள் தொகுதி அந்த மண்டபத் துள் முடங்க வேண்டியதாயிற்று. பொக்களிப்பான் ஏற்பட்டு நோயாளர்களைப் பிரித்து வைப்பதற்கு மற்ற மண்டபத்தை கேட்ட போது நிர்வாகம் அனுமதி மறுத்தது. நிலைமையின் அவலத்தைச் சகிக்க முடியாத முகாம் பொறுப்பாளர் (அவர் ஒரு சிங்கள சகோதரர்) பூட்டை உடைத்து அறையைத் திறந்தார். டிசம்பர் மாத்தில் மக்கள் அங்கு சற்று மூச்சு விட்டு ஆறுதலாக இருந்தனர். ஆனால் எமது கொழும்பு வாழ் தமிழ் பெருங்குடி மக்களின் சமய சேவை இந்த மண்டபத்தில் அகதிகள் வாழ்வதால் தடைப்படுகிறது என்ற முறையீடு சம்பந்தப்பட்ட அரசியல் குழு, அமைச்சு யாவருக்கும் தெரிவிக்கப்பட்டது. விளைவு? பெப்ரவரி முதல் தேதியில் இந்த அகதிகள் குறிப்பிட்ட மண்டபத்தைக் காலி பண்ணி மீண்டும் தமது ஆறு அடிக் கூட்டுக்குள் அடங்க வேண்டும் என்று அறிவித்தல் வந்துள்ளது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற பொன்மொழி தலை கீழாக மாறியிருக்கிறது.

2) கொழும்பு வாழ் தமிழ் "சமூக சேவகி" ஒருவர் என்னிடம் பின்வருமாறு கூறினார்: "யாழ்ப்பாணத்திலிருந்தும் கிழக்கிலிருந்தும் வருடக் கடைசியில் அகதிகள் என்று கூறிக் கொண்டு தமிழர் ஏன் கொழும்பு வருகிறார்கள் தெரியுமா? கொழும்புப் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெற!" சமூக சேவகியின் சமூக உணர்வு அபாரம்!

3) கொழும்பில் உள்ள அகதி முகாம்களின் நிலையை அவதானித்த பெண்கள் சிலர் இது பற்றி ஆராய ஒரு கூட்டத்தைக் கூட்டினர். கொழும்புத் தமிழ் பெண்களின் அமைப்புகளுக்கும் அழைப்பு விடப்பட்டது. ஒரேயொரு அமைப்புத் தவிர ஏனையவை பாராமுகம் காட்டின.

தமிழர்களே இலங்கையில் இரண்டாந்தரப் பிரஜைகள். இந்த இரண்டாந்தரப் பிரஜைகள் அகதிகளானால் என்ன தரத்தில் இவர்கள் வாழ்வார்கள் என்று எண்ணிப் பாருங்கள்! சமயப் பெருமையும் இன நாகரீகமும் கலாசாரமும் பேசுபவர்களும் கருணை போதிக்கும் அரசும் இந்த மக்கள் தொடர்பாக என்ன செய்யப் போகிறன?



சுகயீனம் காரணமாக தொடர்ந்து எழுதாதிருந்த சண் அவர்கள் சரிநிகர் மறு இதழில் மீண்டும் எழுதுகிறார்.

நா.சண்முகதாசன். — ஆசி.

## கொழும்பு முகாம்களில் அகதிகள் விபரம்:—

| முகாம் | இனம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மாணிக்க விநாயகர் கோவில் | தமிழ் | 493 |
| சரஸ்வதி மண்டபம் | - | 601 |
| விவேகானந்த சபை | - | 413 |
| முத்துவெல மட்டக் குளி | - | 577 |
| கப்பித்தாவத்தை | - | 40 |
| மாதிவல | சிங்களம் | 134 |
| மாளிகாவத்தை சமூக நிலையம் | முஸ்லிம் | 111 |
| மாளிகாவத்தை சன சமூக நிலையம் | - | 95 |
| பீற்றர்ஸன் வீதி. வெள்ளவத்தை | - | 200 |
| குப்பியாவத்தை | - | 264 |
| காக்கை தீவு | - | 440 |
| கொம்பனித் தெரு ஜும்மா பள்ளிவாசல் | - | 138 |

## உமா

யுத்தம் எல்லாவற்றையும் மன்னித்து விடும் என்பது வேதவாக்கல்ல; சத்திய வசனமுமில்லை; வெறும் பொய் மொழி!

நூற்றுக்கணக்கான மக்களோடு மக்களாக யுத்தம் சீரழித்த வாழ்வைச் சுமந்து கொண்டு இந்தியாவுக்குப் போய் விடுவோம் என்று நீ கிளம்புகிறாய்.

மழை, காற்றும் கொடுங்காற்று, கடல் வழி காத தூரமாக நீள்கிறது. காலனின் தூதுவர்கள் போல இலங்கை அரசுக் கடற்படை வெறியோடு துரத்த, நடுவழியில் திசையறியாப் படகாக அலைந்தீர்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல்; கடல் மட்டும்தான். பெட்ரோல் தீர்ந்து போய் எப்போதோ நின்று விட்டது இயந்திரம்; இரவும் பகலும் மாறி, மாறி வந்து போகிறது.

தண்ணீரும், உணவும் துளியேனும் இல்லாமல் நாட்கணக்கில் கண்ணீரில் உழன்றாய்.

ஒவ்வொருவராக மரணித்தீர்கள். இறந்தவர்களின் உடலைக் கடலுக்குக் கொடுக்கிறீர்கள். கடல் அவர்களை எங்கு கொண்டு போய்ச் சேர்த்ததோ தெரியாது.


இறுதியாக நீயும் போய் விட்டாய்.......

உமா

எண்பத்தைந்தாம் ஆண்டு யாழ் குடாநாட்டைச் சிலிர்த்தெழ வைத்த மண் சுமந்த மேனியர் நாடகத்தில் உன்னைக் "கிழவி"யாகக் கண்டவர்கள் இன்னும் நினைப்பரே!

இதனை எழுதுகிற போது துயரத் திரையாய்
கடந்த காலம் படர்கிறது
இன்னும் எத்தனை காலம்?

–சிவா கௌதமன்–



# சிங்களக் குடியேற்றங்களின் தன்மைகளும் விளைவுகளும்

எசம்பாட்டான்

தமிழ் முஸ்லிம், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிக முக்கியம் வாய்ந்ததும் அவர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே அநாதைகளாக்குகின்றதுமான ஒடுக்குமுறை "குடியேற்றங்கள்" எனும் நிலச் சூறையாடல்களே இந்நிலச்சூறையாடல்களினால் மாறி மாறி வந்த சிங்கள ஆட்சியாளர்கள் தமது சிங்கள-பௌத்த பேரினவாதத்தை விஸ்தரித்ததோடு எல்லைப்புறங்களில் இருக்கின்ற சிங்கள, தமிழ் விவசாயிகள், உழைக்கும் வர்க்கங்கள் என்போரிடையே முரண்பாடுகளை வளர்த்துக் கொள்வதிலும் வெற்றி கண்டனர்.

இக்குடியேற்றங்கள் அனைத்தும் மேலெழுந்தவாரியாக அல்லது ஒரு நிறுவனத் தன்மை வாய்ந்ததாக சிங்கள-பௌத்த மத நிறுவனங்களின் பெருமளவு ஆதரவுடனும், துணையுடனும் நடைபெறுகின்றன. இத்தகைய கொடூரத்தன்மை வாய்ந்த குடியேற்றங்கள் பின்வரும் வழிகளில் நடைபெறுவதை நாம் காணலாம்.

1. திட்டமிட்ட குடியேற்றம்.
2. சட்டவிரோத விவசாயக் குடியேற்றம்.
3. கைத்தொழில் குடியேற்றம்.
4. வியாபாரக் குடியேற்றம்.
5. மீனவர் குடியேற்றம்.
6. முப்படையினருக்கான குடியேற்றங்கள்.
7. புனித பிரதேசக் குடியேற்றம்.
8. தமிழ்ப் பிரதேசத்தை சிங்களப் பிரதேசத்துடன் இணைத்தல்.

## திட்டமிட்ட விவசாயக் குடியேற்றம்

இக்குடியேற்றங்களுக்கு உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் கல்லோயாத் திட்டத்தையும், திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் அல்லைத் திட்டத்தையும், வவுனியா மாவட்டத்தில் பாவற்குள திட்டத்தையும் மன்னார் மாவட்டத்தில் கொண்டைச்சி மரமுந்திரிகைத் திட்டத்தையும் குறிப்பிடலாம்.

கல்லோயாத் திட்டம் 1941 ஆம் ஆண்டு அப்போது விவசாய அமைச்சராகவிருந்த டி.எஸ். சேனநாயக்காவால் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 கிராமங்கள் சிங்களக் கிராமங்கள்

மாவட்டத்திலிருந்து சிங்களவர் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். இக்குடியேற்றத் திட்டத்தில் 6 தமிழ் பேசும் மக்கள் கொண்ட குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்ட போதிலும் அவை ஒன்றில் நீர்ப்பாசன வசதியற்றதாகவோ அல்லது அவற்றின் நீர்ப்பாசனம் சிங்களப் பகுதியினூடு செல்வதாகவோ இருந்தன.

அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் தொகை மிகப் பெருமளவு ஆக்கிரமிப்பதற்கு முதன்மையான காரணியாக அமைந்தது. கல்லோயா அபிவிருத்தித் திட்டமேயாகும். கல்லோயா அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் 3000 ஆக காணப்பட்ட சிங்களவர் எண்ணிக்கை இன்று 1,46,371 ஆக அதிகரித்துள்ளது.

இவ்வதிகரிப்பின் வேகத்தை அம்பாறை மாவட்ட வாக்காளர் பட்டியலிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். (அட்டவணை 1 ஐப் பார்க்கவும் )

அட்டவணை : 1

| ஆண்டு | முஸ்லிம் வாக்காளர் | சிங்கள வாக்காளர் |
|---|---|---|
| 1947 | 37,000 | 2,394 |
| 1952 | 42,000 | 3,119 |
| 1956 | 44,000 | 3,905 |
| 1960 | 52,000 | 23,000 |
| 1965 | 57,000 | 31,000 |
| 1970 | 62,000 | 39,000 |
| 1977 | 68,000 | 46,000 |
| 1982 | 87,236 | 75,378 |

இவ்வட்டவணையிலிருந்து சிங்கள வாக்காளர் தொகையின் அதிகரிப்பினால் அம்பாறை மாவட்டத்தில் 3ம் நிலையிலிருந்த சிங்களவர்கள் 2ம் நிலக்கு வந்துள்ளனர். தொடர்ந்தும் இதே வேகத்தில் அதிகரிக்குமானால் 1988க்கு பின்னர் சிங்களவர்கள் 1ம் நிலைக்கு வர முஸ்லிம்கள் 2ம் நிலக்கும் தமிழர்கள் 3ம் நிலைக்கும் தள்ளப்படுவார்கள். இத்தகைய நிலை ஏற்படின் முஸ்லிம்கள் தங்களுடைய பிரதேசம் என்று கூறக்கூடிய வகையில் இருக்கும் அம்பாறை மாவட்டத்தை இழந்தவர்கள்

கல்லோயாத் திட்டத்தினாலும் கீழே காட்டப்படும் ஏனைய குடியேற்ற முறைகளினாலும் அம்பாறை மாவட்டத்தின் 2/3 பங்கினை சிங்களவர் ஆக்கிரமித்துள்ளனர். அம்பாறை மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 1752.4 சதுர மைல்களாகும்,. இவற்றுள் 1005.9 சதுர மைல்கள் தனிச் சிங்கள பிதேசமாக மாறிவிட்டது. மீதி 746.5 சதுர மைல்கள் மட்டுமே தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமாகவுள்ளன. இப்போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள், சிங்களவர், தமிழர் என்போரது தற்போதைய நிலையை பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

அட்டவணை : 11

| இனப் பிரிவு | சனத்தொகை | விகிதாசாரம் |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 161,481 | 41.6 |
| சிங்களவர் | 146,371 | 37.6 |
| தமிழர் | 78,315 | 20.1 |

கல்லோயாத் திட்டத்தைப் போல திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய், மொறவெவ, அல்லை, பதவியா போன்ற இடங்களில் திட்டமிட்டபடி விவசாயக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கந்தளாய், மொறவேவத் திட்டத்தில் குடியேற்றப்பட்ட 2,300 குடும்பங்களில் முழுவதும் சிங்களவர்களாகவே இருந்தனர். அல்லையில் குடியேற்றப்பட்ட 500 குடும்பங்களிலும் கணிசமான அளவு சிங்களவர்கள் காணப்பட்டனர். பதவியாத் திட்டத்திலும் பெரும்பாலான அளவு சிங்களக் குடும்பங்களாகவே இருந்தன. இத்தகைய குடியேற்றங்களினால் சேருவல, தெகிவத்தை, நீலாப்பனை, சோமபுர, அரிஞ்லுவ, மகிந்தபுர, சுனித்திராவெவா, கந்தளாய், கடவானை போன்ற பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களாகத் திகழ்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் எல்லாவற்றிலும் பதவியாத் திட்டமே மிக அபாயகரமான திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் வடக்கு, கிழக்குத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ஈழவிடுதலைப் போராட்டம் ஒரு காலத்தில் கூர்மையடையலாம் என்பதைக் கருத்தில் கொண்டு வடபகுதி மக்களிடமிருந்து கிழக்கு மக்களை

இக்குடியேற்றம் அமைகிறது. இன்று அரசின் குடியேற்றம் சம்பந்தமான முழுக்கவனமும் திருகோணமலை மாவட்டத்தில் இருப்பதற்கு திருகோணமலை மாவட்டம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற மாவட்டமாக இருப்பதும் திருகோணமலை துறைமுகம் சர்வதேச ரீதியாக கேந்திர நிலையமாக இருப்பதுமே காரணமாகும். திருகோணமலை துறைமுகத்தின் சிறப்புப் பற்றி "பொதுமை" மே 26 இதழ் பின்வருமாறு கூறுகின்றது.

"இத்துறைமுகம் சுற்றிவர மலைகளினால் சூழப்பட்டு அமைந்துள்ளமை வருடம் முழுவதும் கப்பல்கள் பாதுகாப்பாக தங்கி நிற்கவும் கடலின் ஆழம் எப்படிப்பட்ட இராட்சத கப்பல்களையும் உள்ளே அனுமதிக்கும் தன்மையும் இத்துறைமுகத்தை சர்வதேச நிலக்கு உயர்த்தியுள்ளன. மேலும் துறைமுகத்திற்கு அண்மித்ததாக சீனன்குடா விமானத் தளமும் புகைவண்டி நிலையமும் மையப்படுத்தப்பட்ட வீதிப் போக்குவரத்தும் இதனை மேலும் செழுமைப்படுத்துகின்றன"

திருகோணமலை மாவட்டத்தின் இத்தகைய திட்டமிட்ட குடியேற்றத்தாலும் ஏனைய குடியேற்ற முறைகளாலும் 1880 களில் 935 ஆக இருந்த சிங்களவர் தொகை 1981இல் 86,341 ஆக அதிகரித்துள்ளது. 1981 புள்ளி விபர அறிக்கையின்படி திருகோணமலையில் தமிழர்களின் பெரும்பான்மை என்பது 402 நபர்களிலேயே தங்கியுள்ளது. 1880களில் சிங்களவர்களிலும் பார்க்க 14 மடங்கு கூடியவர்களாக இருந்த தமிழர்கள் 1981இல் அதாவது 100 வருடங்களுக்கிடையில் 402 நபர்கள் மாத்திரம் பெரும்பான்மையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை சிங்களக் குடியேற்றங்களின் கொடூரத்தன்மையையே எமக்கு எடுத்துக் காட்டுகிறது. இதனை 1881 தொடக்கம் 1971 வரையிலான திருமலை மாவட்டத்தில் குடிசன வளர்ச்சி அட்டவணையிலிருந்து நாம் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

வவுனியா மாவட்த்தைப் பொறுத்தவரை அங்கு மைத்திரிபால சேனநாயக்காவால் உருவாக்கப்பட்ட பாவற்குள குடியேற்றத் திட்டமே திட்டமிட்ட விவசாயக் குடியேற்றமாகும். இக்குடியேற்றத்திட்டத்தின் 6 யூனிட்டுக்களிலும் ஏராளமான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு ள்ளனர்.


இதேபோல மன்னார் மாவட்டத்தில் கொண்டைச்சி என்னுமிடத்தில் மரமுந்திரிகை செய்கைக்காக 500 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களவர்

## சட்ட விரோத விவசாயக் குடியேற்றம :

இவ்வகையான அத்துமீறிய குடியேற்றங்கள் அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், மாவட்டங்களில் பரவலாக நடைபெறுகின்றன. இதில் புத்த பிக்குகளே கூடுதலாகப் பங்கு பற்றுகிறார்கள். இவர்கள் தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசங்களில் புத்த சிலைகளைக் கொண்டு வந்து வைப்பதும், சில இடங்களில் சமய ஆசாரச் சின்னங்களைத் தாமே கொண்டு வந்து புதைத்துவிட்டு சிலகாலம் சென்ற பின் அப்பிரதேசம் தமக்குரியது என்று வாதாடுவதும், குடியேற்றப் பிரதேசங்களில் கலகங்களை ஏற்படுத்திச் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை அநாதைகளாக்கி அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொள்வதும் தமிழ் பேசும் மக்களிடமிருந்து அரசாங்கம் சுவீகரித்து பொது நோக்கங்களுக்காக பயன்படுத்தியபின் அரசினால் கைவிடப்பட்ட தமிழ் பேசும் மக்களின் காணிகளில் சிங்களவர்கள் அத்துமீறிக் குடியேறுவதும் தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களிலுள்ள காடுகளில் அவற்றை அழித்துப் பலவந்தமாக அங்கு குடியேறுவதும் இன்று பெருமளவில் அதிகரித்து வந்துள்ளது. இதற்குப் பாதுகாப்புப் படைகளும் அரசியற் பிரமுகர்களும் ஒத்துழைப்பு வழங்குவதும் அரசாங்கம் இது பற்றிய நடவடிக்கைகளில் மறைமுகமான ஆதரவளிப்பதுமான நிலை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகிறது.

அம்பாறை மாவட்டத்தில் தொட்டாற் சுருங்கி வட்டக்கண்டலில் கல்லோயாத் திட்டத்தின் மூலம் சுமார் 500ஏக்கர் நெற்காணி 194 கண்டங்களில் 3 ஏக்கர் வீதம் தமிழ் பேசும் மக்கள் நீண்டகாலமாக விவசாயம் செய்து வந்தனர். இவர்களை புத்தகங்கள விகாரைக்குப் பொறுப்பான தேரோவும் அவரைச் சார்ந்தவர்களும் விவசாயம் செய்ய விடாது தடுத்தனர். இதனை எதிர்த்து கல்முனை நீதிமன்றத்தில் தமிழ் பேசும் மக்களால் 30.09.1981 இல் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கின் ஆதாரங்களைப் பரிசீலித்த நீதிபதி, தேரோவும் அவரது கூட்டத்தினரும் இதில் ஆட்சி செய்யக் கூடாது என தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். எனினும் அபாயம் முற்று முழுதாக நீங்கி விடவில்லை.

இதே போல வவுனியா மாவட்டத்தில் கொக்கச்சான் என்ற இடத்திலும், மன்னார் மாவட்டத்தில் மடுரோட்டிலும் திருமலைக் காடுகளிலும் அத்துமீறிக் குடியேற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். காடுகளில் குடியேற்றும் போது தந்திரோபாயமாக நடந்து கொள்கிறார்கள். முதலில் ஒரு புத்தபிக்கு பத்துப் பேருடன் வருவார். காடுகளில் நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களுக்கு அருகில் ஒரு புத்த கோவிலை கட்டுவார். கோவிலைச் சுற்றி பத்துப் பேருக்கான குடிசைகள் கட்டப்படும். பின்னர் பத்துப் பேரின் குடும்பங்களும் குடிசைகளும் இடம் பெயரும். தொடர்ந்து அவர்களின் உறவினர்கள், தெரிந்தவர்கள் என்போர் வந்து குடியேறுவர். ஈற்றில் அது ஒரு சிங்களக் கிராமமாக பரிணமிக்கும். பிக்குகள் சிங்களப் பாடசாலைகள், சிங்களக் கடைகள் என்பவற்றை தம் அரசியல் செல்வாக்கு மூலம் உருவாக்குவார்கள். அக்காட்டுக்கருகில் தமிழ் பேசும் மக்களின் கிராமங்கள் இருப்பின் அவர்க



# தென்னிலங்கை நாடக போக்கு சில குறிப்புகள் :

## நாடக நெறியாளர் ரோஹண பெரேரோவுடன் ஒரு கருத்தாடல்

தென்னிலங்கையில் நாடகச் செல்நெறி தொழில்சார் வளர்ச்சியினைப் பெற்றுள்ள வேளையில் அதனை வெறுமனே வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தி இலாபம் உழைக்கும் நெறியாளர்கள் மத்தியில் றோகண பெரேரோ நிச்சயமாக வேறுபட்டு விளங்குகிறார். இவர் தனக்கென ஓர் செல்நெறியை வகுத்துள்ளார். கிராமங்களையும் அவற்றின் உயிர்நாடிகளான ஏழை மக்களையும் கருத்தில் கொண்டு அவர்கள் மத்தியில் பலமான நாடக இயக்கங்களை உருவாக்க வேண்டும். எனவும், அவற்றின்மூலம் மக்களுக்கான சிந்தனைத் தூண்டலை நிகழ்த்த வேண்டும் எனவும் அயராது உழைத்து வருபவர்களில் பிரதானமானவராக விளங்குகிறார் இவர்.

"இயல்பாகவே கலை ஆர்வம் உடைய நான் 70களில் தென்னிலங்கையில் தீவிரமாக பரவிய இடது சாரி சிந்தனை வாதத்திற்கு உட்பட்டு கம்யூனிஸ கட்சியின் முழு நேர ஊழியராக இருந்த தம்மயா கொடவின் அரசியல் கருத்துக்களினால் கவரப்பட்டேன்.

76களிற்கு முன் கொழும்பை அண்டிய கிராமங்களில் நடைபெறும் பெரஹராக்களில் விருப்புடன் ஈடுபடும் நான் 76ம் ஆண்டிலேயே அவரது நாடகக் குழுவில் இணைந்து பலகாலமாக உதவியாளராக விளங்கினேன். 87ல் அவர் இறந்த பின் அவரால் நடாத்தப்பட்ட கலை அரங்கக் கல்லூரியை நடாத்தி வருகின்றேன்.

ஆயினும் 73, 74 களில் ஏற்பட்ட பழமை பேண்வாதம், அவநம்பிக்கை, ஆத்மீக உணர்வு மொத்தத்தில் அவரின் மெஞ்ஞான பிறழ்வில் எனக்கு உடன்பாடு கிடையாது. எனக்கென சொந்தக் கருத்து உண்டு. அவ்வக் காலங்களில் எனது செயற்பாட்டு வடிவம் பற்றி மிகவும் அவதானமாக இருப்பேன். தம்மயாகொடவிடமும், காமினி ஹத்துட்டுவேகமவிடமும் கற்றுக் கொண்டவை மூலம் அதி தீவிரப் போக்கையோ அல்லது சந்தர்ப்பவாதப் போக்கையோ கடைப்பிடிப்பது இல்லை. நிதானமாகவே அடியெடுத்து வைக்கிறேன்.

இன்று தவிர்க்க முடியாமல் நமது கலைவடிவங்கள் முதலாளித்துவத்திலேயே தங்கி நிற்க வேண்டிய நிலையில் உள்ளன. நமது மக்கள் அரசின் தொடர்பு சாதனங்களின் ஊடாகவே எமது கலை வடிவத்தை பார்க்கிறார்கள். பார்க்க முனைகிறார்கள். ஏனெனில் இம் முதலாளித்துவ கருத்துருவ சாதனங்களின் அடக்கு முறைகளுக்கு பழக்கப்பட்டவர்கள் அம்மாயைக்குள் சிக்குண்டு தவிப்பவர்கள். இவர்களை இரு பிரிவினராக நோக்க முடியும். முதலாமவர் சாதாரண அடிநிலை மக்கள் இவர்கள் விரும்பியோ விரும்பாமலோ முதலாளித்துவ கருத்துருவ மாயைக்குள் அகப்பட்டவர்கள் இரண்டாமவர் உயர்நிலை மக்கள் இவர்கள் முதலாளித்துவ கருத்துருவ சிந்தனைக்கு உட்பட்டவர்கள் எனவே இவ்விரு பிரிவினர்களது சிந்தனைப் போக்குகளை உடைத்து சரியாக கருத்து தளத்தை உருவாக்குதல் வேண்டும்.

இங்குதான் மேடை நாடகம் வீதி நாடகம் எனும் இரு நாடக வடிவங்கள் பற்றி நோக்குதல் வேண்டும். இவ்விரு துறைகளிலும் ஓரளவு பரீட்சயப்பட்டவன் என்ற வகையில் மக்களுக்கு இலகுவாக கருத்தைச் சொல்வதற்கு சிறந்த ஊடகமாக வீதி நாடகத் துறையையே கருதுகிறேன்.

ஏனெனில் வீதி நாடகத்தைப் பொறுத்தவரை மக்களின் வாழ்விடத்தை நோக்கிச் சென்று குறுகிய நேர இடைவெளியில் இலகுவான முறையில் பொருளாதார எதிர்பார்ப்பின்றி சொல்ல வந்த கருத்தை சொல்ல முடியும். இந்நிகழ்வில் மக்கள் எக்கருத்திற்கு சார்பானவர்களாக இருப்பினும், பார்க்க விருப்பம் இன்றி இருப்பினும் தம்மை நோக்கி வருவதானால் விரும்பியோ விரும்பாமலோ நாடகத்தை நோக்கி இழுக்கப்படுவர். அடிநிலை மக்கள் நேரத்துடன் போராடுபவர்கள் என்பதனால் குறுகிய நேரத்தில் பிரதான செய்தி சொல்லப்படுதல் என்பது முக்கியமானது.

ஆனால் மேடை நாடகங்கள் குறிப்பிட்ட நேரம்குறிப்பிட்ட இடம், அடைக்கப்பட்ட அரங்குகள், குறிப்பிட்ட பணம் என்பவற்றுக்கமையவே மேடை ஏற்றப்படுகின்றன. இங்கு அடிநிலை மக்கள் வருவதற்கான எந்தச் சூழலும் இல்லை. மாறாக குளிரூட்டப்பட்ட ஆடம்பர மண்டபங்களை விடுத்து உயர்நிலை மக்கள் வீதியில் இறங்கத் தயார் இல்லை.

ஆயினும் இவ்விரு பிரிவினருக்கும் நாடகங்கள் போடப்படுவது அவசியமானது எனவே தான் சொல்கிறேன். இவ்விரு வடிவங்களையும் ஒரே நேரத்தில், வளர்தெடுத்துச் செல்வது அவசியம் ஆகும். வீதி நாடகத் துறையை காமினியும் அவரால் உருவாக்கப்பட்டவர்களும் வளம்படுத்துகின்றனர். எனவே புதிதாக நான் எதையும் இத்துறை சார்ந்து செய்ய வேண்டும் என்பதல்ல. எனவே தான் மேடை நாடக வடிவத்தில் அதிக கவனம் செலுத்துகிறேன்.

கடந்த காலங்களில் எமது நாடகத் துறை கணிசமான வளர்ச்சியைப் பெற்ற போதும் அவற்றினூடாக மக்கள் பெருமளவில் கிளர்ந்தெழுந்தார்கள் என்பதற்கில்லை. இதற்கு எமது அமைப்பியல் சார்ந்த செயற்பாடே காரணம் என நினைக்கிறேன்.

நாம் ஒரு கிராமத்தில் நாடகம் நிகழ்த்த வேண்டும் என்றால் ஏற்கனவே தயாரித்த குழுவை கொண்டு போய் நிகழ்வு முடிந்தவுடன் அவ்வுணர்வில்

### சிவமூர்த்தி -

இருந்து விடுபட்டு மக்களையும் விட்டு பிரிகின்றோம். இதனால் விரைவாகமக்களிடம் இருந்து அந்நியப்பட்டு விடுகிறோம். எம்மைப் பற்றியோ எமது கருத்துகளைப் பற்றியோ அவர்கள் அறிவதற்கு சந்தர்ப்பம் கொடுப்பது இல்லை. எனவேதான் இவ்விரு போக்கும் அற்ற மூன்றாவது வடிவம் பற்றி ஆலோசிக்கிறேன்.

அதாவது நாடகக் கலைஞர்கள் சிலர் ஒன்று கூடி ஒரு கிராமத்தை அடைந்து சில தினங்கள் தங்கி பயிற்சிப் பட்டறை நடத்தி அவர்களின் பிரச்சினையை அவர்களினூடாகவே கொண்டு வருதல். இதற்கு அக்கிராமத்தின் இனம் காணப்பட்ட வெகுஜன ஸ்தாபனங்களின் உதவியை நாடலாம்.

மேடை நாடகங்களில் கூட சில இலகு தன்மைகளை நாம் கையாள முயற்சிக்க வேண்டும். ஏனெனில் இதற்கான அரங்குச் செலவுகள் அதிகம் என்பதனால் பெறுமதி கூடிய நுழைவுச் சீட்டு அச்சிடவேண்டி உள்ளது. இங்கு காலம், நேரம், பணம் என்பவற்றின் விரயம் அதிகமாகின்றது. ஆனால் இவற்றைக் குறைத்து இலகு தன்மையை கடைப்பிடிப்போமாயின் அத்துறை மேன்மேலும் வளர சாத்தியம் உண்டு.

இதனால்தான் மக்களின் சிந்தனையை தூண்ட இலகுவான முறையை நாடக மரபை அறிமுகப்படுத்திய பிரெச்டின் நாடகங்களை நிகழ்த்துவதற்கு முயற்சி செய்கிறோம். அரங்கமைப்பு, ஒப்பனை, இசை, ஒலி, ஒளி, பாத்திர நகர்வு என்பவற்றை இலகுபடுத்த முனைகிறோம்.

ஆனால் மக்களுக்கு சொல்லப் போகும் கருத்து பற்றி தெளிவு இருத்தல் வேண்டும். இடம், சூழ்நிலை, காலம் என்பன கருத்தில் கொள்ளப்படவேண்டும். எனது சொந்த அனுபவத்தில் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் பற்றிய கருத்துக்களை நேரடியாக சொல்ல முற்படும் போது மக்கள் பயம் கொள்கிறார்கள். எம்மை நெருங்க மறுக்கிறார்கள். எனவேதான் சொல்ல வந்த விடயத்தை சங்கேதமாகச் சொல்லுதலும் வேறு கதைகள் ஊடாகச் சொல்லுதலும் முக்கியமானது.

தென் இலங்கையில் ஆரம்பத்தில் சிங்கள, பௌத்த பிரவாகத்தினால் கலாசார ரீதியான சிந்தனையே மழுங்கடிக்கப்பட்டு விட்டது. அன்றைய காலப்பகுதியில் நாடகங்கள் நடிப்பதோ கலாசார நிகழ்வுகளில் கலந்து கொள்வது என்பதோ பௌத்த ஆகமத்திற்கு முரணானது என்ற கருத்து புகுத்தப்பட்டது. ஆயினும் பராக்கிரமபாகு காலத்தில் இந்நிலை சற்று தளர்த்தப்பட்டது. இதன் பின்புதான் கலைத்துவ வளர்ச்சி சற்று விரிவு பெறத் தொடங்கியது.

1945, 46, 47களில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட ஆங்கில மயத் தாக்கத்தின் விளைவால் யதார்த்தவாத நாடக மரபு உருவாக முனைந்தும் பௌத்த மதத்தின் கடின போக்கு அதனைத் தடைப்படுத்தியது.

சரத் சந்திரா 1956களில் பாரம்பரிய கலை வடிவங்களூடாக

→ பக்-5

### துப்பாக்கிக்கு மூளை இல்லை




துப்பாக்கிக்கு மூளை இல்லை
இதயமும் இல்லை
விரல் அதன் விசை அழுத்த
வெடிக்கும்
உயிர் குடிக்கும்
கருவில் இருக்கும்
குழந்தையின் எனினும்

விரலே, என் விரலே
மூளையும் இதயமும் உள்ள என் விரலே
ஒரு கணம் யோசி
மீண்டும் ஒரு கணம்..........
குறி சரியா என திரும்பவும் யோசி

இன்னும் நூறு ஆண்டுகள் போயினும்
உன்குறி சரியென
மக்கள் கூறும்
திசையினில் மட்டுமே
விசையினை அழுத்து

அன்றேல்
நீயும் ஓர் கொலைகாரன் என
வரலாறு என் நெற்றியில் எழுதும்.



### மனிதன்



கடவுள் என் கனவில் தோன்றினார்
சுவர்க்கத்தின் வாயிலையும்
நரகத்தின் வாயிலையும்
திறந்து வைத்துக் கொண்டு...

நீயார் என்றார் கடவுள்
நான் மனிதன் என்றேன்
உன் பெயர் என்ன என்றார் கடவுள்
நான் மனிதன் என்றேன்
உன் இனம் என்ன என்றார் மீண்டும்
மனித இனம் என்றேன் நான்
உன் மதம் என்ன என்றார் கடவுள்
கடைசியாக
மனிதம் என்றேன் நான்

கடவுள்
ஒரு புன்னகையுடன் கூறினார்
சரி நீ சுவர்க்கம் புகலாம் என்று

அந்தோ
எனது கனவு கலைந்தபோது
நான் நரகத்தில் கிடக்கக் கண்டேன்.

இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி அதுவும் குறிப்பாக யாழ்ப்பாண தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி சில சிந்தனை அலைகளை எழுப்புவது இன்றைய நிலையில் பொருத்தமானது மட்டுமல்ல அவசியமானதும் கூட.

சரி, பின்வரும் அவதானங்களை ஆழமாக கவனியுங்கள் :

1. ஒஸ்ரின் கார் இன்று வரைக்கும் யாழ்ப்பாணத்தின் பிரபலமான, பயன்மிக்க, தொழிற்பாட்டுச் சின்னமாக உள்ளது. (சண்டை மறுபடி ஆரம்பமான பிற்பாடு யாழ்ப்பாணத்தில் சைக்கிளும் மாட்டுவண்டியும்தான் பாவனை என்பது வேறு விஷயம் !

2. ஒரு புறத்தில், தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு (புலிகள்: யாழ்ப்பாணத்துக் கடைகளின் பெயர்ப் பலகைகள் அனைத்தும் தமிழில் இருக்க வேண்டும்) மறுபுறத்தில் இயக்கங்களுக்குரிய ஆங்கிலச் சுட்டெழுத்துத் திரளே (ACR ONYMS) இன்று வரைக்கும் பிரதானம் பெறுகிறது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அல்ல பயன்பாட்டில் இருப்பது: EPRLF! விடுதலைப்புலிகள் என்ற தமிழ்த் தொடர் அல்ல LTTE என்பதே பயன்பாடு.

3. மூன்று நூற்றாண்டுக்கு மேற்பட்ட அந்நியராட்சியில் ஒரு போதும் (இன்று வரை) பரந்த அளவில் மக்கள் எழுச்சியோ மக்கள் போராட்டமோ நிகழவில்லை.

4. சீதனத்தை ஒழிக்க வேண்டும் என்று ஆணித்தரமாக அறிக்கை விடும் அதே நேரம் வழங்கப்படும் சீதனத்திலும் வரி வசூலிப்பு.

5. எண்பதுகளில் உரம் பெற்ற "மகத்தான" விடுதலைப் போராட்ட அலை சாதி வேற்றுமைகளை அடித்துச் சென்று விட்டது என்று ஒரு புறம் வலியுறுத்தல் நிகழ்கிறது. ஆனால் பல்வேறு தளங்களிலும் சாதி முறை இன்னும் வலுவாக இருப்பது மட்டுமல்ல இயக்கங்களையே சாதி அடிப்படையில் வியாக்கியானம் செய்யும் போக்கு பரவலாக இருந்து வருகிறது. (EPRLF ஐ ஈழப்பள்ளர் Revolutionary Liberation Front என்றும் ENDLF ஐ ஈழ நளவர் Democratic Liberation Front என்றும் கேலி செய்யும் வழக்கு) மேற்கூறிய அவதானங்களில் இருந்து எவ்வகையான பொதுமைப்படுத்தப்பட்ட முடிவுகளுக்கு வரமுடியும் என்பது அல்ல நம்முடைய இப்போதைய பிரச்சினை. மாறாக, இந்த அவதானங்களிலிருந்து ஒரு வகை இரட்டைத் தன்மையும், Hypocrisy யும் ஆழமான விழுமியங்கள் பற்றிய அக்கறையின்மையும் விரவியிருக்கும் ஒருசமூகம் என்று நமது சமூகத்தைச் சொல்லலாம் என்பது எனது கருத்து.

இது ஒரு முக்கியமான சமூகவியல் பிரச்சினை மட்டுமல்ல இப்படியான பிரச்சினைகள் நம்முடைய சமூகத்தில் வேரோடியுள்ளன என்று கூடத் தெரியாமல் பிளேட்டோவின் இருட்குகை மனிதர்கள் போல நமக்குத் தெரிந்த நாலு சுவர்களுக்குள்ளேயே உலகத்தை அடக்கி விட்டதான பிரமையும் திருப்தியும் நமக்கு. உடம்பு நோய்வாய்ப்பட்டால் மருத்துவர்கள் உள்ளார்கள், பொறிகள் பிசகிற்று என்றால் பொறியியலாளர்கள் உள்ளனர்; கணக்குப் பிழை என்றால் சரிபார்க்க அக்வுண்டன்மார் உள்ளனர். நமது சமூகத்திலும் டாக்குத்தர், எஞ்சினியர், அக்கவுண்டன்ட்மாருக்குப் பஞ்சமில்லை. தொகை தொகையாகக் கொட்டிக் கிடக்கி(றது)றார்கள் ! ஆனால் சமூகம் நோய்வாய்ப்பட்டுள்ளது. நோயுப் பகுப்பாய்வு செய்து மருந்து சொல்லத்தான் சமூக விஞ்ஞானிகளும், சமூகவியலாளர்களும் இல்லை! துரதிர்ஷ்டம்; இல்லையா? இருக்கிற ஒன்றிரண்டு சமூக விஞ்ஞானிகளும் மேலைத் தேய உவப்பில் சுகிப்பவர்களாகிப் போய் வேறு சமூகங்களைப் பற்றிய கனவில் உள்ளார்கள். (நியாயப்பாடு: "உண்மையில் I would like to go. ஆனா சணஸ், டோட்டேர்ஸ் இங்க படிக்கத் துவங்கிற்றினம். You know! then எவ்ரி திங் becomes a sort of .. you know......") தேசத்தில் மிஞ்சி இருந்து ஒன்றிரண்டு நல்ல காரியம் செய்வோம் என்று விழைந்த அறிவாளிகளையும் கொலைக் கலாசாரம் நாடு கடத்தி விட்டது.

இனி மிஞ்சப் போவது நமது சமூகத்திற்கு என்ன?

எலும்புக் கூடுகளும், மண்டையோடும், நரமாமிச வழக்கமும்தானா?

இருக்கலாம்.

ஆனால் இந்த நிலைமைக்கு முற்றிலும் ஒரு தரப்பையே குற்றம் சாட்ட இயலாது. ஆரம்பத்தில் நான் கவனத்துக்குக் கொண்டு வந்தது போல நம் சமுதாயத்திலும் களைந்தெறியப்பட வேண்டிய அம்சங்கள் வேரோடி உள்ளன.

ஆயிரக்கணக்கில் லட்சக் கணக்கில் நமது மக்கள் அகதிகளாகப் பெருகுகிற போது நம்மால் எப்படி திருவிழாக்களுக்கும் பிற தேவைகளுக்கும் (தள்ளிப் போடக் கூடியவை) இலட்சம் இலட்சமாகச் செலவழிக்க முடிகிறது? இது எந்த மனோபாவம்? அகதிகள் முகாமிலும், சிலவேளைகளில் இயக்கங்களின் இராணுவப் பயிற்சி முகாம்களிலும் கூட சாதி வேறுபாடு தலைதூக்குவதை எப்படி நியாயப்படுத்துவது? வர்ணாசிரம தர்மம்! சந்தர்ப்பங்களில் தன்னெழுச்சியாக மக்கள் வீதிகளில் இறங்கி அடக்கு முறைக்கெதிராக குரல் கொடுக்கிறார்களே -பலஸ்தீன், காஷ்மீர், தென்னாபிரிக்கா- ஏன் அப்படி எமது சமூகத்தில் நிகழவில்லை?

அடக்கு முறைக்கெதிரான உணர்வு இருக்கிறது; உண்மை. ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் உண்மை. மக்கள் எழுச்சி என்பதும் இல்லை. மக்கள் போராட்டம் என்பதும் கிடையாது.

(அன்னையர் முன்னணி ஒரு விதிவிலக்கான தோற்றப்பாடு. ஆனால் இந்தத் தோற்றப்பாடும் விடுதலைப் புலிகளின் "புண்ணியத்தால்" சிதைந்து போயிற்று)

பலம் மிக்க நடுத்தர வர்க்கத்தின் மனோபாவமே ஈழவிடுதலைப் போராட்டத்தின் குணாம்சமாக இருந்து வந்துள்ளது என்பதையே இது காட்டுகிறது. இந்த நடுத்தர வர்க்கம் தன் சார்பில் யாரும் போராட முன் வருவார்களேயானால் ஆதரவோடு நின்று விடும். போராடப் புறப்படாது. துயரங்களையும், இழப்புக்களையும் சகித்துக் கொள்ளும் என்பது ஒரு பிரச்சினையல்ல. ஏனெனில் எந்த மக்கள் குழுவும் இத்தகைய தியாகங்களுக்கு உட்பட்டே ஆக வேண்டும். எனினும் இந்தத் தியாகங்களின் அர்த்தம் முழுமையான மக்கள் ஈடுபாட்டில்தான் முழுமை பெற முடியும். இதனைச் சாத்தியமாக விடாமல் தடுப்பது நமது பாரம்பரியமும், இப்போது நமக்கு வந்து வாய்த்திருக்கும் போராட்ட தலைமைகளும்தான். (வைரவருக்கு நாய். பிள்ளையாருக்கு எலி. தமிழ் மக்களுக்கு புலி வாய்த்திருக்கிறது) "சோற்றுப் பார்சலையும், தங்க நகைகளையும் தந்து விட்டு நீங்கள் தள்ளி நில்லுங்கள். நாங்கள் உங்களுக்காகப் போராடுகிறோம் " என்பதுதான் பொதுவான போக்கு. இந்த அடிப்படை மாறுமட்டும் நாமும் நமது போராட்டமும் "சுத்திச் சுத்திச் சுப்பற்றை கொல்லைக்குள்ளே தான்"

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி என்பதில் தேசத்தின் பௌதிக விடுதலை என்பது அடிப்படையான அம்சம்தான். ஆனால் தீர்க்கமான அம்சம் அல்ல. தீர்க்கமான அம்சம், அந்தத் தேசத்தின் அல்லது தேசிய இனத்தின் மெய்ம்மையான கலாசார, மானுட விகசிப்பு எவ்வாறு ஏற்படுத்தப்படப் போகிறது? யாரால் ஏற்படப் போகிறது என்பதிலேயே தங்கியுள்ளது.

பேசும் படம், பொம்மை, தமிழ்ச் சினிமா கலாசார வளர்ப்பும் ரம்போ, றொக்கி, கிளின்ட் ஈஸ்வுட் கலாசார ஏகாதிபத்தியும் (இரண்டும் அடிப்படையில் வேறல்ல ஒரு போக்கின் இரண்டு வடிவங்களே என்பது சற்று உற்று நோக்கினால்தான் தெரிந்து விடும்) நமது தேசத்தின் உண்மையான கலாசாரத்தின் மீது ஆக்கிரமிப்பு செலுத்திக் கொண்டிருக்கிற வரை எத்தகைய விடுதலையும் - ஏற்பட்டால் - அது வெறும் லேபல் மாற்றமேதான்.

நமது உண்மையான விடுதலை, நமது சமூகத்தின் இரட்டைத் தன்மையையும் (Double Standards), போலி மனோபாவத்தையும் தேசிய விடுதலைக் கலாசாரத் தீயில் எரிப்பதன் மூலம் மட்டுமே பெறப்பட முடியும். அது ஒரு தனி "வேள்வி" அதனை யார் செய்யப் போகிறார்கள் ?



# பனங்கொட்டைச் சமூகமும் பனங்கொட்டைக் கலாசாரமும்

கலாநிதி. ருத்ர துளசிதாஸ்
சியாட்டில், U.S.A.

## தென்.. நாடக...

"மனமே" நாடகத்தை தயாரித்து அளித்தார். ஆனால் இவருக்கு முன்னமே ஜோன் டி சில்வா என்பவர் சிங்கள தேசியத்தின் தனித்துவத்தின் வெளிப்பாடாக ஆங்கிலேய எதிர்ப்பு நாடகங்களை நிகழ்த்தியவர். சரத் சந்திரா பழைய கலை வடிவங்களை அவற்றின் அழகு கெடாமல் பாதுகாப்பதில் முனைந்தார். ஆனால் யோன்டிசில்வா சிங்களத் தேசியத்திற்கான வெளிப்பாடுகளை கருத்தியல் சார்ந்து சொல்வதில் கவனம் செலுத்தினார். இவரது தேசியவாதத்தில் அமைந்த நாடகங்களாக "சிரி சங்கபோ" "சிங்கபாகு" "பெஸ்ஸலந்தர்" என்பன அமைகின்றன.

1966களில் யதார்த்தவாத நாடக வளர்ச்சி ஒரு ஒழுங்கமைப்புள் செல்ல ஆரம்பித்தது. சுகதபால சில்வா மொழிபெயர்ப்பு நாடகங்களை மேடை ஏற்றுவதில் பிரதான கவனம் செலுத்துகிறார். 60-70 காலப்பகுதிகளுக்கு இடையில் இவ்விரு வடிவங்களுக்கு இடையேயும் பலத்த போட்டி நிலவியது.


யதார்த்தவாத நாடக மரபு 60களின் பிற்பகுதிகளில் சிங்கள தேசியவாதம், முற்போக்கு வாதம் என இரண்டாக பிளவுபட்டு வளரத் தொடங்கியது.

ஹென்றி ஜெயசேன, குணசேனா, கலப்பத்த, தயானந்த குணவர்த்தன, ரஞ்சித் தர்ம கீர்த்தி என்பவர்கள் முற்போக்குவாத யதார்த்த நாடகங்களை உருவாக்குவதில் முனைந்தனர். இதுவே அரசியல் அரங்கின் வளர்ச்சிக்கு காரணமாயிற்று.

68,70 காலப்பகுதியின் பொருளாதார நெருக்கடி, இளைஞர்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்வு, தாக்கங்கள் என்பன J.V.P. யின் உருவாக்கத்திற்கு காரணம் ஆயின. இக்காலப் பகுதியில் பல்கலைக்கழக மட்டங்களிலும் நாடகம் பற்றிய பிரக்ஞை மேலோங்கி வந்தது. அரசியல் சார் பல்கலைக்கழக வெளிப்பாடு நாடகம் சார்ந்த அரசியல் பார்வையையும் ஏற்படுத்தியது. இக்காலப்பகுதியில்தான் அரசியல் அரங்கு பற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் ஆய்வுகளை செய்வதற்கு வெளிநாடுகளுக்கு கூட பலர் சென்று வந்தனர். காமினி ஹத்துட்டுவேகமவும் இக்காலப் பகுதியிலேயே இளம் விரிவுரையாளராக வருகின்றார். 71களில் சிறு சிறு நாடகங்களை இவர் மேடை ஏற்றினார். இதுவே 74களில் தம்மயாகொடவுடன் இவரைப் பிணைத்தது. 76களின் முற்பகுதியிலேயே தம்மயாகொடவின் கலை அரங்கக் கல்லூரி பல நாடகக் கலைஞர்களை உருவாக்குவதில் முக்கிய பணி ஆற்றியது.

70களில் ஏற்பட்ட அரசியல் அரங்க வளர்ச்சியின் தாக்கம் மக்கள் வெறுக்கும் அளவுக்கு சிவப்புக் கோஷங்களை எழுப்பின. நாடக முடிவில் சிவப்பு வெளிச்சத்துடன் கை உயர்த்தி விடைபெறுவது ஒரு போக்காக காணப்பட்டது.

இன்று மொழிபெயர்ப்பு நாடகங்களின் பெருக்கத்திற்கும், சொந்த நாடகங்களில் ஆங்கிலப் பெயர்கள் அதிகமாக பாவிப்பதற்கும் காரணம் என்ன என வினாவியபோது சிங்கள மக்களிடம் உள்ள ஆங்கில மோகத்தின் பலவீனத்தை பயன்படுத்தியும் கொழும்பையே மையப்படுத்தி உள்ள





> ‘மாவலித் திட்டத்தைப் பற்றியும் அதற்கான பணம் எப்படி இராணுவ உபகரணங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் சொல்வதிலேயே அதிகம் அக்கறை காட்டினார். தாங்கள் அதன் மூலம் திருப்தியுறவில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டார். இதில் நகைப்புக்குரிய விசயம் என்னவென்றால், இத்திட்டமே ஆயுதத்திற்குரிய நிதியினை உலக வங்கியிடமிருந்து பெறுவதற்காக கண்டு பிடிக்கப்பட்ட ஒன்றே என்பதுதான்!’


ஆபிரிக்காவில் இயங்கி வரும் அபி ஜாரின் தொடர்பு உத்தியோகத்தர்கள் கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களுக்கு ஆயுத விற்பனையில் ஈடுபட்டிருந்தார்கள். இவர்கள் தமது வேலையை மூன்று கட்டங்களாக செயல்படுத்துகிறார்கள். முதலில் ஒரு நாடு என்ன தேவையை கொண்டுள்ளது, எதற்கு அது பயப்படுகிறது, யார் யாரை அது எதிரிகளாக கருதுகிறது என்பது பற்றிய தகவல்களை தமது நேரடி அவதானிப்பின் மூலமாக திரட்டுகிறார்கள். இதன் நோக்கம் இந்தத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு உறவுகளை உருவாக்கிக் கொள்வதும், பிறகு ஆயுதங்களோ பயிற்சியோ எதுவேண்டுமானாலும் சரி வேண்டிய உதவிகளை வழங்க இஸ்ரேல் தயாராக இருப்பதாக அறியத் தருவதுமேயாகும். இதன் இறுதிக் கட்டமாக ஒரு நாட்டின் தலைவர் ஆயுதங்களை நோக்கிக் கவரப்பட்டதும், மொசாட்டைச் சேர்ந்தவர்கள் விவசாய உபகரணம் போன்ற ஒன்றையும் அவர் கட்டாயமாக வாங்க வேண்டும் எனத் தெரிவிப்பார்கள். அடுத்ததாக அந்த நாட்டின் தலைவர் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை உருவாக்கி கொள்ளும் பட்சத்தில் இவ்வுதவிகளை மேலும் விஸ்தரிக்க முடியும் என்று நம்ப வைக்கப்படுவார். இது இத்தகைய (இராஜதந்திர) உறவுகளை உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு பின் கதவு வழிமுறையாக கையாளப்பட்டு வருகிறது. ஆயினும் ஆயுத விற்பனையானது மிகவும் லாபகரமாக இருந்த போதிலும் இந்த தொடர்பாளர்கள் இதை தொடர்ந்து கடைப்பிடிப்பதில் அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.

எப்படியோ, அவர்கள் இலங்கையில் இதனைச் செய்தார்கள். அமிஜார் என்பவரே இத்தொடர்பை ஏற்படுத்தியவர். கரையோர ரோந்து நடவடிக்கைக்கான PT படகுகளை (DEVORA) விநியோகிப்பதுள்ளிட்ட பல இராணுவ உபகரணங்களை வழங்குவதன் மூலம் இராணுவ ரீதியான இத்தொடர்பை அவர் உருவாக்கினார். அதே சமயம் ஜாரும் அவரது கூட்டாளிகளும் PT படகு எதிர்ப்பு உபகரணங்களை இலங்கை அரசுக்கு எதிராக அவற்றைப் பாவிப்பதற்காக போராடும் தமிழர்களுக்கும் வழங்குகினார்கள். ஒருவருக்கு ஒருவர் தெரியாவண்ணம் இலங்கை அரசுக்கும், போராடும் தமிழருக்கும் இஸ்ரேலியர்கள் தனித்தனியே பயிற்சிகளை வழங்கினார்கள். அத்துடன் உலக வங்கியிடமும் பிறநாட்டு முதலீட்டாளர்களிடமும் இலங்கை அரசு வாங்கிய கடனை தம்மிடம் செய்யும் ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படுத்திவிட்டு அவர்களை எப்படி ஏமாற்றுவது என்றும் இலங்கை அரசுக்கு சொல்லிக் கொடுத்தனர்.

நீண்ட காலமாக பொருளாதார நெருக்கடியைக் கொண்டிருந்த இலங்கை அரசானது விவசாயிகளிடையேயான அமைதியின்மை குறித்து மிகவும் கவலை கொண்டிருந்தது. அதனால் அது தீவின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு அவர்களை குடியேற்றுவதன் மூலமாக அவர்களிடையே பிளவை ஏற்படுத்த விரும்பியது. ஆனால் அதற்கு ஒரு நியாயப்படுத்தக் கூடிய காரணம் அதற்கு தேவைப்பட்டது. இந்த இடத்தில்தான் அமிஜார் வருகிறான். இவன் தான் மாபெரும் பொறியியல் வேலைத் திட்டங்களை கொண்டதான "மாவலித் திட்டம்" என்ற வரண்ட பிரதேசங்களுக்கு மாவலியை திசை திருப்பும் திட்டம் பற்றி கனவு கண்டவன். இதற்கு சொல்லப்பட்ட காரணம் இது இலங்கையின் நீர் மின்னியல் அளவை இரண்டு மடங்காக்கும் என்பதும் 750,000 ஏக்கர் தரிசு நிலம் நீர்ப்பாசன வசதி கொண்ட விளை நிலமாக்கப் படுமென்பதுமாகும். இந்தப் பாரிய திட்டத்திற்கு உலக வங்கி. கனடா, சுவீடன் ஜேர்மனி, ஜப்பான், ஐரோப்பிய பொருளாதார சமூகம் மற்றும் அமெரிக்கா ஆகியவை 2.5 பில்லியன் டொலர்களை முதலிட்டன.

ஆரம்பத்திலிருந்தே இது ஒரு மட்டு மீறிய எதிர்பார்ப்புடன் உருவான திட்டமாக இருந்த போதும் உலக வங்கியோ பிற முதலீட்டாளர்களோ இதை அறிந்திருக்கவில்லை. மாறாக அது இற்றை வரை முன்னேறி வரும் ஒன்றாகவே அவர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். தொடக்கத்தில் 30 ஆண்டுத் திட்டமாக இருந்த இதை 1977ல் மொசாட்டின் உதவியுடன் துரித கதியில் முடிக்கும் சாத்தியம் உண்டு என ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண்டு பிடித்ததுடன் இது துரிதப்படுத்தப்பட்டது !

2.5 பில்லியன் டொலரை முதலிட்டிருந்த உலக வங்கிக்கு இத்திட்டம் காரிய சாத்தியமானதென நம்ப வைக்கவும் விவசாயிகளை அவர்களது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றி வேறிடங்களில் குடியேற்றுவதற்கு வசதியான காரணங்களைக் காட்டவும், மொசாட் இரண்டு இஸ்ரேலிய கல்விமான்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அவர்களில் ஒருவர் ஜெருசலேம் பல்கலைக்கழகத்தின் பொருளியலாளர், மற்றவர் ஒரு விவசாயப் பேராசிரியர். இவர்களின் வேலை இத்திட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும் அதன் பயன் பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதே! இஸ்ரேலின் மாபெரும் நிர்மாண வேலைகட்கான கம்பனியான Sobel Bonah வுக்கு பெரியளவு ஒப்பந்த வேலையும் வழங்கப்பட்டது.

காலத்துக்குக் காலம் உலக வங்கியின் பிரதிநிதிகள் இலங்கைக்கு பரிசீலனைக்காக சென்ற போதும் அவர்களைப் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி குறுக்கு வழிகளினூடாக அழைத்துச் செல்வதன் மூலம் எப்படி ஏய்ப்பது என்று அங்குள்ளவர்களுக்கு ஏற்கனவே கற்பிக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காகவே உண்மையாக கட்டப்பட்ட ஒரு சிறிதளவான பகுதிக்கே அவர்கள் திரும்பவும் கூட்டிச் சென்று காட்டப்படுவர் !

பிறகு மொசாட்டின் தலைமை அலுவலகத்திலிருந்த ஜாரின் திணைக்களத்தில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது ஜெயவர்த்தனாவின் மருமகள் - இப்பெண்மணியின் பெயர் "பென்னி" இஸ்ரேலுக்கு செய்திருந்த இரகசிய விஜயத்தின் போது அவரை அழைத்துச் சென்று இடங்களைக் காட்டும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. அவர் என்னை "சைமன்" என்றே அறிவார். நாம் அவரை அவர் விரும்பிய இடமெல்லாம் அழைத்துப் போனோம். நாங்கள் பொதுவான பலவிசயங்களைப் பற்றிப் பேசிய போதும் அவர் மாவலித் திட்டத்தைப் பற்றியும் அதற்கான பணம் எப்படி இராணுவ உபகரணங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்பது பற்றியும் சொல்வதிலேயே அதிகம் அக்கறை காட்டினார். தாங்கள் அதன் மூலம் திருப்தியுறவில்லை எனக் குறைப்பட்டுக் கொண்டார். இதில் நகைப்புக்குரிய விசயம் என்னவென்றால், இத்திட்டமே ஆயுதத்திற்குரிய நிதியினை உலக வங்கியிடமிருந்து பெறுவதற்காக கண்டு பிடிக்கப்பட்ட ஒன்றே என்பதுதான்!

அந்த நாட்களில் இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் எந்த இராஜதந்திர உறவும் இருக்கவில்லை. உண்மையில் அவர்கள் எங்களை தடை செய்திருந்தார்கள். ஆனால் அவர் (பென்னி) இரகசிய அரசியல் கூட்டங்கள் நடப்பது பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். இந்தக் கூட்டங்கள் பற்றிய இரகசிய தகவல்கள் வெளியான போது இஸ்ரேலின் 150 மொசாட் உறுப்பினர்கள் இலங்கையில் இருப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் எம்மிடமோ உலகம் முழுவதற்குமே அத்தனை பேர் இருந்ததில்லை! உண்மையில் அமியும் அவரது உதவியாளரும் மட்டுமே குறுகிய விஜயம் ஒன்றினை மேற்கொண்டு அப்போது அங்கு சென்றிருந்தார்கள்.

## "குரங்குகள்..?"

.... அவர்கள் (இந்திய அணு விஞ்ஞானிகள் போனதற்கு மறு நாள் எனது வழமையான பத்திரிகை வேலைகளில் ஈடுபட்டிருந்த போது, அமி இரு ஒப்பந்தங்கள் தொடர்பாக என்னை தனது அலுவலகத்திற்கு அழைத்தான். முதலாவது, தென்னாபிரிக்க இரகசியப் பொலிஸாருக்கு பயிற்சி வழங்குவதில் உதவப் புறப்படத் தயாராக இருந்த இஸ்ரேலிய குழுவொன்றிற்கு புறப்பட ஆக வேண்டியதை கவனிப்பது; அடுத்தது ஆபிரிக்க தூதராலயம் ஒன்றிக்கு சென்று தனது சொந்த நாட்டுக்கு பயணமாக இருந்த ஒருவனை அழைத்து வருவது அவனை ஹேர்சிலா பிற்றுவாவிலுள்ள (Herzlia Pituah) அவனது வீட்டிற்கு அழைத்துக் செல்வதும் பிறகு பாதுகாப்பாக விமான நிலையத்திற்கு கொண்டு செல்வதுமாகும்.

இது மொத்தமாக வரவிருக்கும் 50 பேரில் முதல் 9 பேர்களது வருகையாகும். அவர்கள் பின்னர் மூன்று சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டனர்.

● பயங்கரவாத எதிர்ப்புக் குழுவொன்று பெற்றா திக்வா (Petha Tikvah) என்ற இடத்திற்கு அருகிலுள்ள க்ஃபார் சேர்க்கின் (Kfar Sirken) என்ற தளத்தில் பயிற்றுவிக்கப்பட்டது. இக்குழுவுக்கு எப்படி பஸ் மற்றும் விமானக் கடத்தல்காரரை முறியடிப்பது, எப்படி ஒரு கட்டிடத்தில் வைத்து அவர்களை சமாளிப்பது, எப்படி ஹெலிகப்ரர்களிலிருந்து ஒரு கயிற்றின் உதவியுடன் தப்புவது போன்ற பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அத்துடன் இவர்கள் UZIS மற்றும் குண்டு துளைக்காத ஆடை உட்பட இஸ்ரேலிய போர்க் கருவிகள், விசேட கிரனைட்டுகள் என்பவற்றையும் வாங்குவதாக இருந்தனர்.


> ‘ஆம். இந்த மனிதர்கள் குரங்குகளை போன்றவர்கள். இன்னமும் நாகரிகமடையாத ஒரு நாட்டிலிருந்து இவர்கள் வருகிறார்கள். அவர்கள் மரங்களை விட்டிறங்கி நீண்ட நாளாகவில்லை. எனவே அதிகம் எதிர்பார்க்காதே!’


"நான் உன்னை விமான நிலையத்தில் சந்திக்கிறேன் ஏனென்றால் இலங்கையிலிருந்து ஒரு குழுவினர் இங்கு பயிற்சிக்காக வருகின்றார்கள் " என்றான் அமி.

விமான நிலையத்தில் நான் அவனை சந்தித்த போது அமி லண்டனிலிருந்து வரும் இலங்கை விமானத்திற்காக காத்துக் கொண்டிருந்தான். "இவர்கள் வந்திறங்கும்போது முகத்தைச் சுழிக்காதே.." என்றான் என்னிடம்.

"நீ என்ன சொல்கிறாய்? " என்றேன் நான்.

"ஆம். இந்த மனிதர்கள் குரங்குகளை போன்றவர்கள். இன்னமும் நாகரிகமடையாத ஒரு நாட்டிலிருந்து இவர்கள் வருகிறார்கள். அவர்கள் மரங்களை விட்டிறங்கி நீண்ட நாளாகவில்லை. எனவே அதிகம் எதிர்பார்க்காதே!"

நானும் அமியுமாக அந்த ஒன்பது இலங்கையரையும் விமான நிலைய பின் கதவு வழியாக ஒரு குளிரூட்டப்பட்ட வாகனத்தில் அழைத்து வந்தோம்.

● இஸ்ரேலில் மிகப் பெரியளவில் ஆயுதங்களை கொள்வனவு செய்ய ஒரு கொள்வனவு பிரிவும் இருந்தது. உதாரணமாக, இவர்கள் எட்டு "டெவோரா" (Devora) PT விசைப்படகுகளை வடக்குப் பயங்கரவாதிகட்கெதிராகப் பாவிக்கவென கொள்வனவு செய்தனர்.

● இது தவிர, உயர்மட்ட உத்தியோகத்தர்களை கொண்ட ஒரு குழுவும் இருந்தது. இது, றாடர் போன்ற கடற்படை தளபாடங்களை (இந்தியாவிலிருந்து இன்னமும் உதவிகள் பெற்றுக் கொண்டிருக்கும் தமிழர்கட்கு எதிராகப் பாவிக்கவென) வாங்குவதற்கு விரும்பியது.

நான் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மருமகள் பென்னியை முக்கியமான சுற்றுலாப் பயணிகள் பார்க்கும் இடங்களுக்கு இரண்டு நாட்களுக்கு அழைத்துச் செல்லும் பொறுப்புகளுடன் இருந்தேன். அதன் பின் எமது அலுவலகத்திலி

# ஸாட்டிடம் பயிற்சி: அடுத்தது வரப் போவது யார்?

— ஒஸ்ட்ரோவ்ஸ்கி



OR OSTROVSKY W

து வயதான ஒஸ்ட்ரோவ்ஸ்கி ஒரு கனடியர். பரபரப்பூட்டிய டைய BY WAY OF DECEPTION நூலானது இலங்கை ர்பான பகுதிகளின் தமிழாக்கம் இது. ஒஸ்ட்ரோவ்ஸ்கியின் டை செய்ய இஸ்ரேல் எடுத்த முயற்சிகள் தோல்வியில் தன. 1984- 86 வரை மொஸாட் உளவாளியாக விக்டர் ரோவ்ஸ்கி இருந்தார் என்பது பொய் என்ற கதைகள் ப் பட்ட போதும் மொஸாட்டின் முன்னாள் தலைவர் மெயர் , மற்றும் மொஸாட் உத்தியோகத்தர் ஐஸர் ஹரேல் ஆகி அண்மையில் தெரிவித்திருக்கும் தகவலின் படி நூலோ யின் நூல் 'அபாயகரமான' உண்மைகளைக் கொண்டி து என்பது இப்போது உறுதியாகி விட்டது.

அமி பிறகு என்னை கஃபார் சேர்க்கின்னுக்கு போகச் சொன்னான். அங்குதான் இலங்கையின் சிறப்பு படை பிரிவுக் குழு பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தது. அவர்களுக்கு தேவையானதை செய்து விட்டு டெல் அவிவுக்கு பின்னேரம் அவர்களை அழைத்து வருமாறும் அமி என்னிடம் தெரிவித்தான். அவ்வாரம் அந்தப் பகுதிக்கு மாற்றப்பட்டிருந்த ஜோசியுடன் என்னை கலந்து உரையாடி விட்டே இதை செய்யுமாறு எனக்கு எச்சரிக்கை விடவும் அவன் மறக்கவில்லை.

ஜோசியும் இலங்கையில் இருந்து வந்த இன்னொரு பிரிவுக்கு பயிற்சியளிப்பதை கவனிப்பவனாக இருந்தான். ஆனால் இவர்கள் என்னுடையவர்களை சந்திக்கக் கூடாது என்பது முக்கியமாகவிருந்தது. ஏனென்றால் அவர்கள் தமிழர்கள்.

சிங்கள குழுவின் பரம எதிரிகள். பெருமளவில் இந்துக்களை கொண்ட இந்த தமிழர்கள் 1948ல் பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரை தாம் பௌத்த சிங்கள பெரும்பான்மையினரால் பாரபட்சமாக நடத்தப்பட்டு வருவதாக கூறினார்கள். 16 மில்லியன் சனத் தொகை கொண்ட இலங்கையில் 74% சிங்களவரும் கிட்டத்தட்ட 20% தமிழர்களும் ஆவர். இத்தமிழர்கள் பெருமளவில் நாட்டின் வடக்கை மையமாகக் கொண்டு வாழ்பவர்கள். 1983ல் ஒரு தமிழ் கெரிலா குழு- புலிகள் என பொதுவாக அழைக்கப்படுகிறது- தனித் தமிழ் நாட்டை அமைக்கவென ஒரு போராட்டத்தை வடக்கில் தொடங்கியது. இது இன்று வரை தொடர்வதுடன் ஆயிரக் கணக்கில் உயிர்களை இருபுறமும் பலி கொண்டுள்ளது.

தென்னிந்தியாவில் 40 மில்லியன் தமிழர் வாழும் தமிழ் நாடு மாநிலத்தில் இந்த தமிழருக்கு ஆதரவு பெருமளவில் இருக்கிறது. பல தமிழர்கள் யுத்தத்திற்கு பயந்து தென்னிந்தியாவிற்கு அகதியாக ஓடியுள்ளனர். இலங்கை தமிழருக்கு பாதுகாப்பும் பயிற்சியும் இந்தியாவால் வழங்கப்படுவது குறித்து இலங்கை அரசு இந்தியா மீது குற்றம் சுமத்தி வருகிறது. ஆனால் உண்மையில் இலங்கை அரசு குற்றம் சுமத்த வேண்டியது மொசாட்டைத்தான்!

கொமாண்டோ கடற்படைத்தளத்தில் பயிற்சி பெறும் தமிழர்கள் டெலோராவில் பயிற்றுவிக்கப்படுவது போலவே உடைத்துக் கொண்டு நுழைவது, கண்ணி வெடி வைப்பது, தகவல் தொடர்புகளை செய்வது, கப்பல்களை நாசமாக்குவது போன்றவற்றை பயின்று கொண்டிருந்தனர். அங்கு ஒவ்வொரு குழுவிலும் 28 பேர் இருந்தார்கள். ஆகவே ஜோசி தமிழர்களை ஹுஃபாவுக்கு (Haifa) அன்றிரவு அழைத்துச் செல்வதென்றும், சிங்களவர்களை நான் டெல் அவிவுக்கு அழைத்து செல்வதென்றும் ஒழுங்கு செய்தோம். இதன் மூலம் ஒருவரை ஒருவர் நேரடியாக சந்திக்காமல் வைத்திருக்க முடிந்தது.

உண்மையான பிரச்சினை பயிற்சியின் இரண்டு வார கால நேரத்தில் உருவானது. இந்த இரு வாரமும் ஒருவரை ஒருவர் அறியாத இரு குழுக்களும் ஹஃபார் சேர்க்கின்னில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தனர். இது மிகவும் பெரிய தளமாக இருந்த போதிலும் இவர்களது துள்ளல் பயிற்சியின் போது ஒரு தடவை ஒருவரை ஒருவர் சில யார் இடைவெளியில் கடந்து சென்றார்கள். சிங்களவர்களுக்கான அடிப்படை பயிற்சிகள் முடிந்ததும் கடற்படை தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு தமிழர்கட்கு விசேடமாக, அண்மையில் சிங்களவர்கட்கு கற்பிக்கப்பட்டவற்றினை எப்படி முறியடிப்பது என்பதை கற்பிப்பதாக இருந்தது. இது மிகவும் அழகாக ஒழுங்கு செய்யப்பட்டது. அவர்களுக்கு இரவு நேரப் பயிற்சியையோ அல்லது தண்டனைகளையோ வழங்குவதன்மூலம் அவர்களை ஓய்வில்லாமல் எந்நேரமும் அலுவலாக வைத்திருந்தோம். இதன்காரணமாக ஒரே நேரத்தில் இரு குழுவினரும் டெல் அவிவ்வில் ஒன்றாக இருக்க விடாமல் தவிர்த்தோம். இவ்விரு குழுக்களும் சந்தித்திருந்தால் அமி என்ற இந்த தனி மனிதனது நடவடிக்கைகள் இஸ்ரேலிய அரசியல் சூழ்நிலையையே மிகுந்த ஆபத்துக்குள்ளாக்கியிருக்கும். எனக்குத் தெரியும் Peres இதை அறிந்திருப்பானாக இருந்திருந்தால் இரவுகளில் தூங்கியே இருந்திருக்க மாட்டான். ஆனால் நல்ல வேளையாக அவன் அறிந்திருக்கவில்லை !.

மூன்று வாரங்கள் முடிகின்ற தறுவாயில், சிங்களவர்கள் மிகவும் அதிஉச்ச இரகசிய கடற்படை கொமாண்டோ தளமான அற்லிற்றுக்கு (Atlit) போக தயாராகிக் கொண்டிருந்த போது, தான் அவர்களுடன் போகப் போவதில்லை என்று அமி என்னிடம் தெரிவித்தான். Sayret Matcal (சேரல் மற்கல்) என்ற குழு இவர்களுக்கான பயிற்சியை செய்வதாக இருந்தது. இக்குழு மிக உயர்மட்ட, எதிரியின் பலமறியும் உளவு வேலைகளைச் செய்யும்-புகழ் பெற்ற என்டபே தாக்குதலைச் செய்த- குழுவாகும். (இக் கடற்படை கொமாண்டோக்கள் அமெரிக்க நீர் நாய்களுக்கு சமானமானதாகும்.) " கவனி, எங்களுக்கு ஒரு சிக்கல் வருகிறது! 27 SWAT குழுவை சேர்ந்த இவர்கள் இந்தியாவிலிருந்து வருகிறார்கள். அட ஆண்டவனே! இது என்ன? முதலில் சிங்களவர்களும் தமிழர்களும். இப்போது இந்தியர்களுமா? அடுத்ததாக வரப் போவது யார்? என்றேன் நான்

ாராவது
பென்னி ஒரு
பண். கெரோ
வி
சொல்லலாம்.
வன்
தால் இவளும்
பெண்ணா
பாதும் இன்ன
தவப் பெண்
தாள். ஆகவே
னித கிறிஸ்தவ
ார்க்க விரும்
டாவது நாள்
ில்" (Vered
"றோஸ் ஒப்
Galilee) என்ற
விடுதிக்கு
ர்றேன். இது
காட்சிகளை
தும் நல்ல
க் கூடியது
அமைந்த ஒரு
ாகும். எமக்கு
இருந்தது.
னக்கு றாடர்
வாங்கவி
மட்ட உத்தி
கவனிக்கும்
ந்தது. அஸ்
என்ற இட
ta) அல்டா
ரணம் தயா
திற்கு இவர்
செல்ல நான்
தேன். இக்
ளுக்கு வேண்
ம் என என
-து. ஆனால்
ணம் வாங்கு
புகளை பார்
பிரதிநிதி இவ
பார்த்துப்
னர். இவர்
ங்கப் போவ

இவ்தில்லை" என்று சொன்னார். செய்வார்கள் "ஏன்?" என்றேன் நான்.

"இந்த குறிப்புகள் இந்தக் குரங்குகளால் எழுதப்படவில்லை. டெக்கா என்ற இங்கிலாந்து றாடர் கொம்பனிக்காரர்களால் இது எழுதப்பட்டிருக்கிறது. எனவே இவர்கள் தாம் என்ன வாங்கப் போகிறோம் என்பதை முன்னரே அறிவார்கள். இவர்களுக்கு ஒரு வாழைப்பழத்தை கொடுத்து அனுப்பி விடு.. உனது நேரத்தை வீணாக்காதே" என்றான் அந்த மனிதன்.

"சரி, அப்படியானால் இவர்களை சந்தோஷப்படுத்தும் விதத்தில் ஏதாவது (றாடர் பற்றிய) விளக்கவுரை சொல்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்."

– இந்த உரையாடல் ஹீபுரு மொழியில் நடந்தது. அப்போது நாம் ஒன்றாக இருந்து சிற்றுண்டி சாப்பிட்டு தேனீரும் கோப்பியும் அருந்திக் கொண்டிருந்தோம். அல்டா பிரதிநிதி, "இவர்களை திருப்திப்படுத்த ஒரு சிறு விளக்கவுரையை சொல்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அப்படி சொல்வதானால் கொஞ்சம் முகசுப்பாத்தியும் விடுவம்" என்று ஒப்புக் கொண்டான்.

இந்த உரையாடலின் பின் நாம் இன்னொரு அலுவலகத்திற்கு போனோம். துறைமுகங்களில் ஊற்றப்பட்ட எண்ணையை சுத்தம் செய்யும் மிகப் பிரமாண்டமான துப்பரவாக்கும் கருவி (Vacum Cleaner) ஒன்றின் பெரிய ஒளிபுகும் விளக்கப்படம் அங்கு இருந்தது. இப்பிரதிநிதியிடம் அழகான விளக்கப்படங்கள் கொண்ட இயக்கு முறை வழிகாட்டிப் பிரசுரங்களும் இருந்தன. எல்லாம் ஹீபுரு மொழியில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் இவன் ஆங்கிலத்தில் தனது விளக்கவுரையை ஆற்றினான். அவனது விரிவுரை "மிக உயர்சக்தி வாய்ந்த றாடர் கருவி" பற்றியதாக இருந்தது. எனக்கு சிரிப்பை அடக்கிக் கொள்வது மிகக் கஷ்டமாக இருந்தது. அவன் மிகவும் அளவு மீறி றாடர் கருவி பற்றிப் புளுகினான். இந்தக் கருவி கடலில் நீந்திக் கொண்டிருக்கும் ஒருவனுடைய நீந்துமிடத்தையும் அவனது சப்பாத்தின் அளவையும் தெரிவிக்கக் கூடியது. அவனது பெயர், முகவரி, ஏன் குருதியின் குறாப் என்ன என்பதைக் கூட இது தெரிவிக்கும் என்று சொன்னான். அவன் தனது "விரிவுரையை" முடித்ததும் இலங்கையன் ஒருவன் அவனுக்கு நன்றி சொன்னான். தாம் இஸ்ரேலின் தொழில் நுட்ப வளர்ச்சியையிட்டு வியப்பு அடைவதாகவும், இக்கருவி தமது கப்பல்களுக்கு பொருத்தமற்றது என்பதால் வாங்க முடியவில்லை என்றும் தெரிவித்தான். இவர்கள் தமது கப்பலைப் பற்றி எங்களுக்குச் சொல்கிறார்கள்! எப்படி இருக்கும்? இந்தக் கப்பல்களை எங்களுக்கு நன்றாக தெரியும். ஏனென்றால் அவற்றை செய்தவர்களே நாங்கள்தான்.!

என்னை ஹொட்டேலில் இறக்கி விட்டதும் நான் அமியிடம் சொன்னேன். "இந்த இலங்கையர்கள் றாடர் கருவியை வாங்கப் போவதில்லை" என்று.

"ஓம், எனக்குத் தெரியும்" என்றான் அமி.

இவன் ஆங்கிலத்தில் தனது விளக்கவுரையை ஆற்றினான். அவனது விரிவுரை "மிக உயர்சக்தி வாய்ந்த றாடர் கருவி" பற்றியதாக இருந்தது. எனக்கு சிரிப்பை அடக்கிக் கொள்வது மிகக் கஷ்டமாக இருந்தது. அவன் மிகவும் அளவு மீறி றாடர் கருவி பற்றிப் புளுகினான். இந்தக் கருவி கடலில் நீந்திக் கொண்டிருக்கும் ஒருவனுடைய நீந்துமிடத்தையும் அவனது சப்பாத்தின் அளவையும் தெரிவிக்கக் கூடியது. அவனது பெயர், முகவரி, ஏன் குருதியின் குறாப் என்ன என்பதைக் கூட இது தெரிவிக்கும் என்று சொன்னான்.

## ஜனாதிபதி ஆணைக்குழு முன் கடற்படைப் பணிப்பாளர் சாட்சியம்

இதன்படி கோர்னல் விஜய விமலரத்ன, கமாண்டோர் சமரசேகர, திரு. பெரேரா, நான் ஆகிய நால்வரும் 1985 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி இஸ்ரேல் நோக்கிப் புறப்பட்டோம்.

எமது கடவுச் சீட்டில் இஸ்ரேல் செல்வதற்கான விசா குத்தப்படவில்லை. விஸா தனியான தாளில் தரப்பட்டது. நாம் இஸ்ரேல் நாட்டிற்குள் சென்றதும், அங்கிருந்து வெளியேறியது அந்த விஸா தாளில் குறிக்கப்பட்டது. ஆகையால் எமது கடவுச சீட்டைக் கொண்டு நாம் இஸ்ரேல் சென்றோமா? என்பதைக் கண்டறிய முடியாது. (விஸா தாள் பிரதி ஒன்று விசாரணையின் பொழுது சமர்ப்பிக்கப்பட்டது)

இஸ்ரேல் உற்பத்தியான சுப்பர் டோரா ராடரை கொண்ட மூன்று படகுகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன. இந்தப் படகில் பொருத்தப்பட்டிருந்த ஜெனரேட்டர்கள் எமது தேவைக்கு அமைவானதாக இல்லை.

அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று 1988 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் திகதி இஸ்ரேல் சென்றது. அந்தக் குழுவிற்கு நான் தலைமை தாங்கிச் சென்றேன்.

— ஐவன் அத்தநாயக்க

# முஸ்லிம் பிரச்சினைத் தீர்வு என்ன?

எம்.வை.எம். சித்தீக்

தேசிய இனப் பிரச்சினை உக்கிரமடைந்த காலங்களில் இருந்து முஸ்லிம்கள் தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் பல்வேறு கோரிக்கைகளை வட கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக முன் வைத்து வந்தனர். அவற்றுள் சில பின்வருமாறு :

1. இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டதிலிருந்து இன்று வரை வடக்கும்,கிழக்கும் ஒன்றிணைந்திருப்பது போல, தொடர்ந்து இணைந்திருக்கட்டும். ஆனால் மத்திய அரசாங்கம் வடகிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு, உரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் என்பனவற்றை அரசியல் அமைப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்துவதுடன், அதன் நடைமுறைப்படுத்தலையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இதற்கென ஒரு ஆணைக்குழு நிரந்தரமாக வட-கிழக்கில் இருக்க வேண்டும் என்பது . இது முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கை

2. வடக்கும்-கிழக்கும் நிரந்தரமாகவே இணைந்திருக்கட்டும். ஆனால் வடகிழக்கிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களை பிரதேச சபை ரீதியாக அல்லது உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இணைத்து, அம்பாறை மாவட்டத்தை மையமாக வைத்து முஸ்லிம் மாகாண சபை ஒன்றினை அமைக்க வேண்டும் என்பது தேவையானால் புதிய பிரதேச சபைகள் அல்லது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்படல் வேண்டும். ஆனால் முஸ்லிம் மாகாணசபையும், தமிழ் மாகாணசபையும் தனிப்பட்ட, ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத, சுதந்திர அமைப்புக்களாக இருக்க வேண்டும். இது சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கை. இது சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அடங்கியிருந்தது. இந்தக் கோரிக்கையில், அம்பாறை மாவட்டத்திலுள்ள சில உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் (சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவை) ஊவா மாகாணத்துடன் இணைக்கப்படல் வேண்டும் என்பதும் ஒரு அம்சமாக அடங்கியிருந்தது.

3. மரபு ரீதியான எல்லைகளைக் கொண்டு வடக்கும் கிழக்கும் தனித்தனியான மாகாணசபைகளையே கொண்டிருக்க வேண்டும். எல்லைகளில் கூட்டுதல், குறைத்தலுக்கு இடமில்லை என்பது மூன்றாவது வகைக் கோரிக்கை. இது ஐக்கிய தேசியக் கட்சியினையும், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினையும் சேர்ந்த முஸ்லிம்கள் முன் வைத்த கோரிக்கை. பின்னர் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியானது சுதந்திர மக்கள் முன்னணி (D.P.A.) மூலம், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முஸ்லிம் மாகாணசபையினை ஏற்றுக் கொண்டது.

4. வடக்கும் கிழக்கும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டு, கிழக்கில், மூன்று மாவட்டங்கட்கும் மூன்று சபைகள் அமைக்கப்பட்டு, மூன்று பிரதான சமூகத்தினரும் தனித்தனியாக ஆட்சி செய்யக் கூடியதாக அமைக்கப்படல் வேண்டும். இது முஸ்லிம் லீக்கினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கை.

5. சுவிற்சலாந்தின் அனுபவத்தை அடிப்படையாக வைத்து "கென்டன்" (CANTON) முறையிலாக, கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் மூன்று நிர்வாக அலகுகளை உருவாக்குவது. சுவிற்சலாந்து ஒரு சிறிய நாடு. இங்கு பிரான்சு, ஜேர்மன், இத்தாலி ஆகிய மூன்று இனத்தவர்கள் வாழ்கின்றனர். சமஷ்டி ஆட்சி வெற்றிகரமாக நடாத்தப்படும் நாடு இது. இம்முறையின்படி ஒவ்வொரு கென்டனும் தத்தமது நடவடிக்கைகளைத் தாமே கவனித்துக் கொள்ளும். ஆனால் ஏதாவது ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கென்டன் வட மாகாணசபையின் கீழ் இயங்க விரும்பினால், இயங்கலாம். அல்லது தனியாக இயங்கலாம். இவ்வாறு பல்வேறு கோரிக்கைகளுடன், பல்வேறு பிரிவினராக இருந்த முஸ்லிம்கள், இன்று, சற்று முன்னேறி இரண்டு வகையான கோரிக்கைகளுடன் மட்டுமே இருக்கின்றனர். அவை பின்வருமாறு -

1. அகில இலங்கை முஸ்லிம் லீக், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவற்றின் ஒற்றுமையுடன் கோரப்படும் "புதிய" முஸ்லிம் மாகாணசபை.

2. சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கோரும் வடக்கிற்கும், கிழக்கிற்குமான தனி மாகாணசபைகள்.

மூன்று முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைந்து கோரும் "புதிய" முஸ்லிம் மாகாண சபைக்கு ஈரோஸும், விடுதலைப்புலிகளும் தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளும் இயக்கங்களும் இணங்கியுள்ளன.

மேற் கூறியவற்றிலிருந்து பின்வரும் முடிவுகளை நாம் பெறலாம் :

1. இன்னும் முஸ்லிம்கள் தமது கருத்துக்களில் அல்லது கோரிக்கைகளில் ஒற்றுமைப்படவில்லை.

**முஸ்லிம் மக்கள் சிக்கல் தொடர்பாகத் தொடரும் கருத்தாடலில் இம்முறை கிழக்குப் பல்கலைக் கழகப் பீடாதிபதி - தெரிவிக்கும் கருத்துக்கள் —:**

2. முஸ்லிம்களின் கோரிக்கை தொடர்பான இணக்கம் முக்கியத் தமிழ் குழுக்களினால் தெரிவிக்கப்படவில்லை.

இன்றையஅரசியல் யதார்த்த நிலையில், மூன்று முஸ்லிம் கட்சிகளும் பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கத்திற்கு வந்த தமிழ்குழுக்களின் இணக்கத்தை விட, பேச்சுவார்த்தை நடாத்தப்படாமல் இருக்கின்ற இரண்டு பெரிய தமிழ்க் குழுக்களின் இணக்கமே முக்கியமானதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

3. முஸ்லிம்களின் இரண்டு வகையான கோரிக்கைகளும் இன்றைய அரசியல் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது. முஸ்லிம்கள் இன்றைய வட கிழக்கின் அரசியல் யதார்த்தம் என்ன? வட கிழக்கு இணைந்த தமிழ் ஈழத்திற்கு குறைந்த எதனையும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்று அரசாங்கத்துடன் ஒரு ஆயுதக்குழு போராடி வருகின்றது. கடந்த ஐந்து மாதங்கட்கு மேலாக இவ் யுத்தத்தில் அரசாங்கம் வெற்றி கொள்ள முடியவில்லை. ஆயிரக்கணக்கான முஸ்லிம்களும், தமிழர்களும், சிங்களவர்களும் அகதிகளாகியுள்ளனர். என்ன விலை கொடுத்தாயினும் எமக்கு, அமைதி வேண்டுமென வட கிழக்கு மக்கள் நினைக்கின்றார்கள். அரசாங்கம் மீண்டும் லண்டனில் பேச்சு வார்த்தையினை தொடங்கியுள்ளது போலும் தெரிகின்றது.

எனவே, முஸ்லிம்களின் கோரிக்கை அல்லது அபிலாஷை என்ன வகையாக இருப்பினும், அது பின்வருவன நடைபெற்றாலே சாத்தியமாகும்.

முதலாவதுபடி, இன்று அரசாங்கத்துடன் ஆயுதம் ஏந்திப் போர் நடாத்தி வரும் போராளிக் குழுக்கட்கும், அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு இணக்கம் ஏற்படல் வேண்டும்.

இரண்டாவது படி, முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்திய தமிழ் குழுக்கட்கும், இதுவரை முஸ்லிம் கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தாத இரண்டு பெரிய தமிழ்க் குழுக்கட்குமிடையில் அரசியல் இணக்கம் ஏற்பட வேண்டும்.

மூன்றாவது படி, தமது கோரிக்கையைப் பொறுத்தவரையில் இரண்டு வகையாகப் பிரிந்திருக்கும் முஸ்லிம்கள் தமது கருத்தில் அல்லது கோரிக்கையில் ஒற்றுமைப்படல் வேண்டும்.

பின்னர், ஒற்றுமைப்பட்ட முஸ்லிம்களும், ஒற்றுமைப்பட்ட தமிழ்க் குழுக்களும் முஸ்லிம்களின் கோரிக்கை தொடர்பாக ஒத்த முடிவிற்கு வருதல் வேண்டும்.

மேற்கூறிய நான்கு விடயங்களும் நடைபெறாவிடின், முஸ்லிம்களின் கோரிக்கைகள் நிறைவேறப் போவதும் இல்லை. வட கிழக்கு மக்கள் இன்று விரும்புகின்ற அமைதி ஏற்படப் போவதுமில்லை. இன்றைய வட கிழக்கின் அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இவற்றைச் செய்ய முடியும். இதற்கு முஸ்லிம்களின் ஒற்றுமை மிக மிக முக்கியமானது. முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தமது சொந்த அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக வெவ்வேறுபட்ட கோரிக்கைகளை முன் வைக்காமல், உண்மையில் நடைமுறைச் சாத்தியமான விடயங்களைப் பற்றிச் சிந்திப்பதும், பேசுவதும் பொருத்தமானதாகும். அதன் மூலமே தமது மக்களுக்கு இன்று வேண்டியதைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

முடிவாக, முஸ்லிம்கள் அவசரப்பட்டு அரசாங்கத்தின் சமாதான முயற்சிகட்குத் தடையாக அமையாதிருப்பதுடன், மேற்கூறிய நான்கு விடயங்களும் நடைபெறுவதற்கும் தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளல் வேண்டும். அதன் மூலம் வட கிழக்கில் தமது பொது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும், உரிமைகளையும், பாதுகாப்பினையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் முயற்சித்தல் வேண்டும்.

# இனத்துவமும் பெண்களும்....

— பாஞ்சாலி —

சமூக விஞ்ஞான கழகத்தினால் அண்மையில் ஒரு பாசறை நடாத்தப்பட்டது. இப்பாசறையில் "இனத்துவமும் பெண்களும்" என்ற தலைப்பின் கீழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. குறிப்பாக இன முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள நாடுகளில் பெண்களுக்கும் இன முரண்பாட்டிற்கும் இடையே நிலவும் தொடர்பு பற்றி பேசப்பட்டது. அதன் சாராம்சம் வருமாறு :

இரண்டு சமூகங்களிடையே இன முரண்பாடு நிகழும் போது, அம்முரண்பாட்டின் மையத்தில் பெண்கள் இருப்பதை பலரும் உணர்வதில்லை. இரு வகையில் பெண்கள் இம் முரண்பாட்டின் மத்தியில் இருக்கின்றார்கள்.

முதலாவதாக, ஒவ்வொரு சமூகத்தினதும் மறு சந்ததியினரை உருவாக்குபவர்கள் பெண்கள் ஆவர். இதனாலேயே ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்த ஆண்களும் தமது சமூகத்தின் பெண்களது கருவளத்தை (fertility) தீர்மானிப்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். அனேகமான சந்தர்ப்பங்களில் பெரும்பான்மையினம்/ஆட்சியதிகாரத்தில் உள்ள இனம், சிறுபான்மையினத்தினது சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதில் அதிக தீவிரம் காட்டுகிறது. அதே போல சிறுபான்மையினம் தமது சனத்தொகையைப் பெருக்குவதில் அதிக அக்கறை காட்டுகிறது. இவ்வகையில் சனத்தொகைக் கட்டுப்பாடு என்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் அம்சமாகிறது. இவ்வகையான காலங்களில் கருவளக் கட்டுப்பாடானது பெண்களுடைய கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவும் அரசியல் தீர்மானமாகவும் அமைகிறது.

இன முரண்பாடுகள் நிகழும் காலகட்டங்களில் ஒவ்வொரு இனமும் அதன் "இனத் தூய்மையை" பேணுவதில் அதிக கவனம் செலுத்துகிறது. எனவே இக்காலகட்டங்களில் ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த ஆண்களும் தமது பெண்கள் தமது இனப் பெண்களையே பெற்றெடுக்க வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இணங்க கற்பு, தூய்மை போன்ற கருத்தியல்களை வலியுறுத்துகின்றனர்.

இரண்டாவதாக, ஒரு சமூகத்தின் கலாசாரத்தினை அடுத்த தலைமுறைக்கு வழங்குவதில் பெண்கள் பெரும் பங்கு வகிக்கின்றார்கள். தாமே கலாசாரத்தின் சின்னங்களாக இருப்பதுடன் மட்டுமன்றி குழந்தைப் பருவத்தில் இருந்தே அடுத்த தலைமுறையினருக்குக் கலாசாரத்தை வழங்குவதில் பெண்கள் பெரும் பங்கு வகிக்கிறார்கள். பாசறையில் கலந்து கொண்ட பெண் ஒருவர் இதற்கு நல்ல உதாரணம் ஒன்றை எடுத்துக் காட்டினார். "இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள ஆண்களை எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என என்னால் இனங் கண்டு கொள்ள முடியவில்லை. ஆனால் இவ் ஆண்கள் தமது மனைவியருடன் வந்திருந்தார்களேயானால் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என இலகுவாக இனங் கண்டுகொண்டிருப்பேன். ஏனெனில் ஆண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சர்வதேச உடையான காற்சட்டை, சேட் தான் உடுப்பார்கள். ஆனால் அவர்களது மனைவியரோ அவர்களது இனத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வரையில் தம்மை அலங்கரித்துக் கொள்வார்கள்."

போராட்ட காலங்களில் பெண்களும் பெருவாரியாக விடுதலை இயக்கங்களில் சேர்க்கப்படுவதுண்டு. எனினும் யுத்தங்களின் முடிவில் "மீண்டும் குசினிக்குள் போன நிலை" தான் வரலாற்றுப் பாடமாக இருப்பதைப் பல பெண்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இலங்கையின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது பெண்கள் தொடர்பாக ஒரு வேலைத் திட்டம் தீட்டப்படாமை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் அனாகரிக தர்மபாலா ஆறுமுக நாவலர் போன்றோர் கூட பெண்கள் தொடர்பாகக் கொண்ட பிற்போக்குத்தனமான கருத்துக்கள் உதாரணங்களுடன் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.



# சர்வதேச மனித உரிமைகள் தின கலா நிகழ்வு : விதர்சனம்

இ.சங்கரன்

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் 11ம் திகதி முதல் 14ம் திகதி வரை கலா நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது "விபாவி" எனும் ஒரு புதிய கலாசாரக் குழு.

• முற்போக்கான புதிய சிந்தனைகளை கலை, இலக்கிய, கலாசாரத் தளங்களில் கொண்டுள்ள தமிழ்–சிங்கள–முஸ்லிம் கலைஞர்களின் கூட்டமைப்பே இது.

• நாளுக்கு நாள் நலிவுற்று வரும் சமூகத்தின் குரலுக்கு வலிமை சேர்க்கவும், கலாபூர்வமான வீச்சையும், ஒளியையும் ஏற்றவும் விபாவியைச் சேர்ந்த கலைஞர்கள் பாடுபடுவர்.

• நவீன இலக்கியம், நாடகம், திரைப்படம், வீடியோ, ஓவியம், சிற்பம் போன்ற பல துறைகளிலும் புதிய கலாசார முனைப்புக்களை (ALTERNATVE VISION) ஏற்படுத்த விபாவி கலைஞர்கள் உழைப்பர், என, விபாவி தன்னைப் பற்றிச் சுருக்கமாக அறிமுகம் செய்து கொண்டிருந்தது.

ஏற்கனவேயுள்ள தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, திரைப்படம் என்பன செய்திகளையும், விடயங்களையும் மக்களுக்கு வழங்குவதில் உள்ள அரசு சார்புத் தன்மையை நிராகரித்து உண்மையின் கீற்றுக்களை வெளிக்கொணரவும் இத்தொடர்பு சாதனங்களூடாக வெகுஜனக கலாசாரம் என்ற பெயரில் வளர்க்கப்படும் வர்த்தகக் கலாசாரத்தை அல்லது விதேசியக் கலாசாரத்தை நிராகரித்து பதிலீடாக ஒரு மாற்றுக் கலாசாரத்தை நிறுவவும் விபாவி எடுக்கும் முயற்சி பாராட்டுக்குரியதுதான்.

அதுவும் கொழும்பில் நிலவும் ஜனநாயகப் "பிரமைச்" சூழ்நிலைக்குள் இவ்வாறான ஒரு முயற்சியில் "விபாவி" கலைஞர்கள் இறங்குவதென்பது உயிரைக் கையில் பிடித்த மாதிரி என்றால் ஒன்றும் மிகையல்ல நாய்களின் மோப்பத்துக்குள்ளும் நான்கு முழு நாட்கள் நடந்து முடிந்ததென்னவோ உண்மைதான்.

இந் நான்கு நாட்களும் மனித உரிமைகள், சமூக உணர்வு, மற்றும் நுண்கலை, நவீன அரங்கம் பற்றிய விவாத அரங்கங்களும், சிற்ப, ஓவிய, சுவரொட்டி, புத்தகக் கண்காட்சியும் விவரணப் படங்கள், வீடியோ திரைப்படங்கள், வீதி நாடகங்கள், மேடை நாடகங்கள் என்பனவும் இடம் பெற்றன.

இது பற்றிய குறிப்புகளுக்கு வருமுன்னர் இவ்விடத்தில் இன்னொரு விடயத்தைக் குறிப்பிடல் பொருந்தும் என நினைக்கிறேன். ஒரு மாற்றுக் கலாசாரத்தை உருவாக்குவதற்காக முதலில் விபாவி இரண்டு தளங்களில் செயற்பட வேண்டி இருக்கும். முதலாவது, அடிப்படையில் மனிதாயத்தை இழந்து வழி திறந்து விடப்பட்டுள்ள ஏகாதிபத்திய கலாசாரத்திற்கெதிரானது. இரண்டாவது, ஒடுக்கப்பட்டு வரும் சிறுபான்மை இனக் குழுமங்களின் தேசிய கலாசாரத்தை மதிக்கவும், பேணவும், வளர்க்கவும் எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பாக.

இவ்விரண்டில் விபாவி எந்தளவிற்குச் செயற்பட்டிருக்கிறது என்று சொல்லப்போனால் இரண்டாவது தளத்தில் கிஞ்சித்தளவான அக்கறை ஏதுமின்றி செயற்பட்டிருப்பதை அதன் நிகழ்ச்சித் தயாரிப்பிலிருந்து புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது.

சிறுபான்மை இனக் குழுமங்களான தமிழ்–முஸ்லிம்– மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அல்லது அவர்கள் தொடர்பான எந்த நிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. இசை நிகழ்ச்சியில் சில தமிழ் பாடல்களைத் தவிர. கூட அருந்ததியின் ஓவியங்கள் சிலவும் வைக்கப்பட்டிருந்தன.

இத்துடன் சேர்த்துச் சொல்லப்பட வேண்டிய இன்னொரு விடயம், நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஜயசிங்க மண்டபத்துள் அறிவிப்புகள் தமிழில் இடம் பெறாததும், நிகழ்ச்சிக்கு வந்திருந்த தமிழ் அன்பர் ஒருவர் சுட்டிக் காட்டியதன் பின்னர் தமிழில் இடம் பெற்றதும். இவ்வாறான தவறுகள் விபாவியின் திட்டமிடப்பட்ட புறக்கணிப்பல்ல என்பது புரிந்து கொள்ளப்படக்கூடியதாயினும், ஏற்கனவே இவ்வாறான புறக்கணிப்புகளுக்குள்ளாகி இருப்பவர்களுக்கு இது விசனத்தை ஏற்படுத்தி விடும்.

இன்னொரு புறத்தில் உள்ள மற்றொரு உண்மை என்னவென்றால் இந்நிகழ்ச்சிக்கென போதுமான அளவில் தமிழில் சுவரொட்டி விளம்பரங்கள் செய்யப்பட்டிருந்தும் ஒப்பீட்டளவில் மிகக் குறைவான தமிழர்களே வந்திருந்தனர் என்பது.

இவ்வளவிற்கும் நிகழ்ச்சி நடந்த மண்டபம் போக்குவரத்திற்கு இலகுவாக காலி ரோட்டில் அமைந்திருந்ததும் சூழ தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்கள் இருந்ததும்– வெள்ளவத்தை, தெஹிவளை, பம்பலப்பிட்டி– குறிப்பிடத்தக்கது. பிரவேசம் இலவசம் என்பதும் இன்னொரு விடயம். அதே வேளை அப்ஸராசின் இன்னிசை வார்ப்புகளுக்கான 250/– டிக்கெட் எல்லாம் பம்பலப்பிட்டி சரஸ்வதி லொட்ஜில் அமோகமாக விற்பனையாகி முடிந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இனி விடயத்திற்கு : 74களில் வீதி நாடகத் துறையில் இறங்கி 16 ஆண்டுகளாக வீதி நாடகத்துடனேயே வாழ்ந்து வரும் காமினி ஹத்தெட்டுவேகமவின் 3 நாடகங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது. இவரது வீதி நாடகங்களில் உள்ள அழகியல் தன்மைகளை விட அவர் சொல்ல வந்த கருத்து சார்ந்த விடயம் தொடர்பாக அதிக முக்கியத்துவம் கொடுப்பார். இதுவே அவரது வீதி நாடகங்களில் வெற்றி என்றாலும் கூட சில சமயங்களில் பலவீனமாகவும் ஆகி விடுகிறது. இன்று தென்னிலங்கையில் உள்ள வீதி நாடகக் குழுக்களுக்கு ஏதோ ஒரு வகையில் காமினியே ஊற்றுக் கண்ணாக இருந்திருக்கிறார். இவரது சேட் (Shirt) என்ற வீதி நாடகமும், இன்னும் இரு வீதி நாடகங்களின் சில பகுதிகளையும் இங்கு பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது.

மற்றையது றெட்வி சில்வாவின் இன்னொரு வீதி நாடகத்தையும் பார்க்க முடிந்தது. இவரும் காமினியுடன் ஒன்றாகப் பணியாற்றியவர். காமினி 86,87களில் J.V.P. சார்ந்த போக்கொன்றைக் கடைப்பிடித்தார். இதனால் அவரிலிருந்து பிரிந்து தனியான ஒரு குழுவை தான் உருவாக்கியதாகக் கூறுகிறார். மசுரன் கதாவ (விலை மதிப்பற்ற பொருட்களின் கதை) என்ற இவரது வீதி நாடகம் நிகழ்த்தப்பட்டது. இது எட்வர்ட் பொன் இன் "த ஸ்ரோன்" என்ற நாடகத்தின் தழுவல். மனிதனிடத்திலிருந்து அவனது விலை மதிப்பற்ற பொருட்கள் எவ்வாறு பறிக்கப்படுகின்றன என்பதும், பதிலாக யார் யாருக்கோவான பாரத்தை எல்லாம் அவன் எவ்வாறு சுமக்க வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகிறான் என்பதும் பற்றியது. பெருமளவில் குறியீடுகளைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட வீதி நாடகம் இது.

இது தவிர ஏகாதிபதி (சர்வாதிகாரி), பஞ்சாயுத (பஞ்சாயுதம்), ருகிறு (உதிரம்) ஆகிய மேடை நாடகங்களையும் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. ஏகாதிபதியை தர்மசிறி பண்டாரநாயக்க இயக்கி இருந்தார். 74ம் ஆண்டில் முதன் முறையாக தயாரிக்கப்பட்ட நாடகம் இது. 70களில் ஏற்பட்ட ஜே.வி.பியின் எழுச்சியும் அதன் தொடர்ச்சியான இடதுசாரி அலையும், அது நாடக உலகில் தோற்றுவித்த அரசியல் அரங்கு (Political Theatre) என்ற போக்கும் என்பதன் அடிப்படையில் எழுந்த நாடகங்களில் ஒன்றே இது.

வழமையான கையுயர்தல்களும், நாடக முடிவில் திரையின் பின்புறம் சிவப்பாதலும் என்று நோக்கும் போது இதில் புதிதாக எதுவும் இல்லை என்று கூறலாம். ஆனால் 74ல் தயாரிக்கப்பட்ட நாடகம் என்ற வகையில் அரசியல் அரங்கொன்றைத் தே[illegible]றிவிப்பதற்கு தூவிலி (R.R.[illegible]ரக்கோன்) மரா சாத் (சு[illegible] பால டி சில்வா) சாக்கி (விஜித்த குணவர்த்தனா என்பவற்றோடு இ[illegible] முன்நின்றது என்பது [illegible]க்கது.

"பஞ்சாயுத குழந்தைகளுக்கு பிறந்தவுடன் கையில் அல்லது இடுப்பில் கட்டும் பஞ்சாயுதம் என்பவற்றுடன் தொடர்புடையது. வன்முறை மனிதருள் எவ்வாறு சிறுவயதிலிருந்து புகுகிறது / புகுத்தப்படுகிறது என்பதும் ஒரு வன்முறை மனிதனின் மனச்சாட்சியும், அவனது சூழலும் பற்றியது. லிண்டன் சேமகே இதை இயக்கி இருந்தார். பாத்திர வார்ப்பும் வளர்ப்பும் அருமையாகச் செய்யப்பட்ட நாடகம் இது.

மூன்றாவது ருகிறு, மக்ஸ் பிரெக்சின் "அன்டோராவை" தழுவி ரோஹண பெரேரோவால் தயாரிக்கப்பட்ட நாடகம் இது. 1988ல் தயாரிக்கப்பட்டது. 27 முறை இதுவரை மேடையேற்றப்பட்டுள்ளது. ஒரு சிங்களக் குடும்பத்தில் குழந்தையிலிருந்தே வளர்க்கப்பட்டு வந்த தமிழ் இளைஞன் ஒருவனைச் சுற்றி கதை பின்னப்பட்டுள்ளது. இனவாதச் சூழலும் அதன் பாதிப்புகளையும் உணர்த்துவதாக இது தயாரிக்கப்பட்டதாக கூறும் ரோஹண பல இடங்களில் மேடையேற்றும் போது மக்கள் ஆத்திரப்பட்டு நாடகத்தை தூற்றினார்கள். தாம் அணிந்திருக்கும் இனவாத முகமூடி தமக்கு முன்னால் கிழிபடுவதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது. என்னைப் பொறுத்தவரை இதுவும் ஒரு வெற்றிதான். அவர்கள் தங்களை உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்கிறார்.

மொத்தத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்கள், வீதி நாடகங்கள், திரைப்படங்கள் எல்லாம் நடைபெற்று வரும் யுத்தத்திற்கெதிராகவும், யுத்தமும், வன்முறையும் மனிதனுள்ளும் அவனைச் சூழவும் ஏற்படுத்தும் பௌதிக, மனோரீதியான பாதிப்புகளையும், சிதைவுகளையும், மனித இருப்பின் ஒவ்வொரு கணத்தையும் யுத்தம், யுத்த பீதியும் விழுங்கி வருவதையும் உணர்த்துவன வாயமைந்தன.

இந் நிகழ்ச்சியைப் பார்த்த ஒரு நண்பர் நிகழ்ச்சி முடிவில் சொன்னார் "வாழ்வு பற்றி நம்பிக்கை தரும் கணங்கள் இது."

காமினி ஹத்தொட்டுவேகம அளித்த "சட்டை" வீதி நாடகம்.



# வாசகர் செ(ா)ல்வடி

## சரிநிகரும் - புலிவாலர்?

ஆசிரியருக்கு !

சரிநிகர் ஐந்து இதழ்களையும் பார்த்தேன். தொடர்ச்சியாக தமிழ்ப் பத்திரிகைகள் மூடப் பட்டு வரும் நிலையில் -இங்கு திசையும், இறுதியாக தினபதியும் மூடப்பட்டதாக உங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பிலிருந்து ஒரு தமிழ் பத்திரிகை வருவது மகிழ்ச்சிக்குரியதுதான்.

எனினும் ஐந்து இதழ்களிலும் "சரிநிகர்" தன்னை நடுநிலையானதாகக் காட்ட முயற்சித்தாலும் அதன் உண்மையான முகம் அவ்வப்போது தெரிந்து தான் விடுகிறது.

முதலாவது இதழிலேயே அதன் முகமூடி கிழிந்து போயிற்று. எவ்வாறெனில் "மீண்டும் போரா" என்ற தலைப்பில் எழுதிய செய்திக் குறிப்பில் புலிகள் யுத்த நிறுத்த மீறலை மேற் கொண்ட சம்பவங்கள் பற்றி எதுவும் குறிப்பிடாமல், அது பற்றி எதுவித Analys உம் இல்லாமல், எப்படியோ இவை எல்லாவற்றிக்கும் பொறுப் பேற்க வேண்டியது இலங்கை அரசே என்பதுதான் எமது அபிப்பிராயமாகும்" என முடித்துள்ளது.

இது அப்பட்டமான புலியின் வால் இல்லாமல் வேறென்ன?

இன்னொரு உதாரணம் : புலிகளை இராணுவபலத்தால் வெல்ல முடியாது என்றும், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகவே புலிகள் போராடுகின்றார்கள் என்ற தொனிப்பட இரண்டாவது இத ழில் ஆசிரியத் தலையங்கம் எழுதியுள்ளீர்கள். இதில் எவ்வளவு உண்மையுள்ளது? சுய நிர்ணய உரிமைக்காகப் போராடும் புலிகள் அது பற்றி பேசாமலே அரசுடன் சேர்ந்து 14 மாதங்களாக பேச்சு நடாத்தியுள்ளார்கள் என்றும் நீங்கள் தானே குறிப்பிட்டுள்ளீர்கள்.

இதே போல் பொதுமக்களின் குரல்வளை இரு பகுதியிலுமே நெரிக்கப்பட்டதாகக் கூறும் நீங்கள்தான் (இதழ்-3 முற்பக்கக் கட்டுரை) அதற்கு முந்திய இதழில் புலிகளின் பாசிசம் தமிழ் மக்களின் பிரச்சினை என்றும் தமக்குஎது வேண்டுமோ அதைத் தமிழ் மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள் என்றும் எழுதி இருக்கிறீர்கள்.

பொது மக்களின் குரல் வளை நெரிக்கப்பட்டிருக்கும் போது தமக்கு எது தேவை என்பதை அவர்கள் எப்படிச் சொல்ல முடியும்?

மாற்று இயக்கங்களை கடுமையாக விமர்சிக்கும் நீங்கள் புலிகளை மட்டும் அவ்வாறு விமர்சிக்கத் தயங்குவது ஏனோ?

இறுதியாக கொழும்பிலிருந்து "சரிநிகர்" வெளி வர மாற்று இயக்கங்கள் அனுமதித்திருக்கின்ற அளவுக்கு யாழ்ப்பாணத்தில் "சரிநிகர்" வைத்திருக்கவே புலிகளால் ஜனநாயகம் வழங்க முடியுமா?

பாசிஸ்டுக்கள் தேசியத்திற்காகவும் போராட முடியும், விதேசியத்திற்காகவும் போராட முடியும், புலிகள் தேசியத்திற்காகத்தான் போராடுகிறார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

இன்னொரு விஷயம் ஏறாவூரிலும், காத்தான்குடியிலும் முஸ்லிம்களைப் படுகொலை செய்தது புலிகள்தான் என்பது ஊறரிந்த ரகசியம். "முஸ்லிம் இனப் படுகொலை" பற்றிய கட்டுரையில் புலிகள் தான் கொன்றார்கள் என அடித்துச் சொல்ல சரிநிகர் தயங்குவதேன்?

மொத்தத்தில் சரிநிகர் சரிந்து விட்டது புலிகள் பக்கம்.

பொ. பூலோகசிங்கம்
யாழ்ப்பாணம்.

## இல்லாத்தை கருவறுக்கும் நிஸார்!

"சரிநிகர்" இதழ் 4இல் சட்டத்தரணி யூ.எம். நிஸார் அவர்கள் "ஆயுத பலத்தில் நம்பிக்கையற்ற புதிய தலைமுறை தேவை" என்ற தலைப்பில் கட்டுரை எழுதியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

அக்கட்டுரையின் ஓரிடத்தில், "ஆயுதங்களில் நம்பிக்கை வைத்து முஸ்லிம் சமூகத்தின் பாதுகாப்பினைக் கோருவது எல்லாம் வல்ல இறைவனுக்கு செய்யும் துரோகம் மாத்திரமல்ல அவனுக்கு இழைக்கும் கொடூரச் செயலுக்கு ஒப்பானதாகும் ..." எனக் கூறுகின்றார்.

அப்படியானால் "முஸ்லிம்கள் ஆயுதம் தரிப்பதும், பயிற்சி பெற்றிருப்பதும் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரண்பாடான கைங்கரியமாகும்" என்ற கருத்தை இக் கட்டுரையைப் படிக்கின்ற குறிப்பாக பிறமதத்தினரிடையேயும், இஸ்லாமிய அடிப்படை அறிவு குறைந்தவர்களிடையேயும் விதைத்து விடும். இத்தகைய நம்பிக்கையானது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரண்பட்டதினால், சிறு குறிப்பு எழுதுவதின் மூலம் தெளிவு பெறுவார்களென நம்புகிறேன்.

ஆயுதத் தரிப்பும், பயிற்சி பெற்றிருப்பதும் இஸ்லாமிய கோட்பாடுகளுக்குட்பட்ட அம்சமென்பதைக் காட்டும் ஆதாரம் மாத்திரமே இங்கு தரப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரம் "இஸ்லாம் பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடுவதற்கு ஆயுதத் தரிப்பும், பயிற்சி பெற்றிருப்பது மாத்திரமே வழியென வலியுறுத்திக் கூறவில்லை" என்பதையும கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

"காரியங்களைச் செய்யத் தகுமானவன் அல்லாஹ்" என்பது முஸ்லிம்களின் அகீதாக் (கொள்கை)களில் ஓர் அம்சமாகும். ஆகையால்தான் "எதுவும் சுயமாக இயங்குவதல்ல, எல்லாம் அல்லாஹ்வின் சக்தி கொண்டே இயங்குகின்றன" என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

ஆகவே, "சுயமாக இயங்கக் கூடியவன் அல்லாஹ் மாத்திரம்" என்ற நம்பிக்கையே "தௌஹிதா"கும். இஃது போல் சுயமாக இயங்கக் கூடியவைகள் இருக்கின்றன என்ற நம்பிக்கையே "ஷிர்க்"காகும். இந்த அடிப்படையில் ஆயுதம் மட்டுமல்ல, பொதுவாக எல்லா அம்சங்களும் அடங்கும்.

ஆயுதமோ, நிராயுதமோ சுயமாக பாதுகாக்கும் சக்தியைக் கொண்டுள்ளதென்ற நம்பிக்கையே ஷிர்க்காகும்.மாறாக ஆயுதத்தின் மூலம் அல்லாஹ் பாதுகாப்பை வழங்குகிறான் என்ற நம்பிக்கை தௌஹீதாகும். இந்த அடிப்படையில் தான் முஸ்லீம்கள் ஆயுத தரிப்பையும், பயிற்சி பெற்றிருப்பதையும் கொண்டிருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

இதனால்தான் எல்லாம் வல்ல அல்லாஹ் அல்குர்ஆனில் மிகத் தெளிவாக பின்வருமாறு சுட்டிக் காட்டுகிறான்.

"அவர் (நிராகரிப்பவர்)களை எதிர்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும், திறமையான போர்க் குதிரைகளையும் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். அவற்றினால் அல்லாஹ்வின் விரோதியையும், உங்களுடைய விரோதியையும் அவர்களல்லாத வேறு சில (பகைவ)ரையும் நீங்கள் பயப்படச் செய்து விடலாம். (குர்ஆன் 8:60)

எனவே, முஸ்லிம்கள் ஆயுதம் தரிப்பதும் ஆயுதப் பயிற்சி பெற்றிருப்பதும் அவசியமான காரியம் என்பதை உணர்த்த மேற் காணும் வசனமொன்றே போதுமானதாகும்.

எம்.எம்.எம். நூறுல்ஹக்
1132, தலுப்பிட்டிய வீதி,
-ஹுனுப்பிட்டிய, வத்தளை-



வாசகர் சொ(ா)ல்லடிகள் வரவேற்கப்படுகின்றன. சரிநிகர், 6, அலோ சாலை, கொழும்பு-3, இலங்கை.

## திசைக்கு நடந்தது தெரியுமா?

ஆசிரியருக்கு, !

நான் உங்களுடைய பத்திரிகையை வந்த நாள் முதல் கொண்டு வாசித்து வருபவன். உங்களுடைய போன முறைப் பத்திரிகையை (சரிநிகர்) நான் பார்த்த போது ஒரு கம்யூனிஸ்ட் பத்திரிகையை பார்த்தது போல் இருந்தது. ( நிறம்?.... விடயம்?...) இப்படித்தான் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த திசை என்ற பத்திரிகை அடிக்கடி தனது நிறங்களை மாற்றிக் கொண்டது. அதற்கு என்ன நடந்தது எனத் தெரியுமா? சரிநிகர் அப்படி செய்யாது என எண்ணுகிறேன்.

விமர்சகன்
கொழும்பு 12.

## ஏன் இந்த மௌனம் ஐயா?

ஆசிரியருக்கு !

"சரிநிகர்" தமிழ் மக்களுக்கான, மக்களுக்கிடையிலான பிரச்சினையைத் தீர்ப்பதில் நிதானமாகவும் நேர்மையாகவும் செய்திகளை வெளியிட வேண்டுமென விரும்புகிறோம்.

ஆனால் கடந்த சில இதழ்களைப் பார்க்கும் போது அது தன் வழியில் நின்று விலகி விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழ்-முஸ்லிம் கலவரம் ஆரம்பமான பின் சரிநிகர் இது தொடர்பாக எழுதியவைகளில் தமிழ்-முஸ்லிம் கலவரத்திற்கு தமிழ் இயக்கங்களும், தமிழ் மக்களுமே பொறுப்பேற்க வேண்டும் என எழுதியுள்ளது.

உண்மையில் தமிழ்-முஸ்லிம் கலவரத்தின் போது நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும் பாதிக்கப் பட்டதும் உண்மைதான். எனினும் அதையும் விட மேலாக தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். கிராமங்களிலிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

(கொல்லபட்டவர்கள் பற்றிய கணிப்பீடு ஒன்று எடுக்கப் படின் இது தெரிய வரும்" அண்மையில் கூட சத்துருக் கொண்டானில் ஏராளமான தமிழர்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள்.

ஏறாவூர் படுகொலைகளை மட்டும் படங்களுடன் வெளியிடும் மற்றைய பத்திரிகைகள் இது பற்றி மௌனம் சாதிப்பதைப் போல் சரிநிகரும் கண்டும் காணாமல் இருக்கப் போகிறதா?

ஜிஹாத், முஸ்லிம் ஊர்காவல் படை ஆகியன அரச படைகளுடன் சேர்ந்தே இப்படுகொலைகளைப் புரிந்துள்ளன. இன ஐக்கியத்தை விரும்புவதாகக் கூறும் முஸ்லிம் தலைவர்கள் கூட இது பற்றி மௌனமாக இருக்கிறார்கள். எனவே இனியாவது "சரிநிகர்" உள்ளதை உள்ளபடி எழுதும் என நம்புகிறோம்.

குமாரசிங்கம்
கொழும்பு 2.

## நடுநிலையா? நடாநிலையா?

தங்கள் "சரிநிகர்" பத்திரிகையைத் தொடர்ந்து படித்து வரும் வாசகர் என்ற முறையிலும் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டு உழைத்து அதன் காரணமாக "வெளிநாடு" போய்ச் சேர வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளானவன் என்ற முறையிலும் இதனை எழுதுகிறேன்.

"நடுநிலை"யான அரசியல் பாதையை கொண்டு எழுதப் பட்டது போலத்தான். உங்களுடைய பத்திரிகை முதலில் தோன்றிற்று. ஆனால் சில கட்டுரைகளைத் திரும்பிப் படித்தபோதும், நீங்கள் எழுதாத விஷயங்கள் நிறைய இருக்கிறதே என்று உறைத்த போதும் நீங்கள் உண்மையில் "நடுநிலை" யானவர்களல்ல எனத் தோன்றுகிறது.

புலிகளை நீங்கள் விமர்சிக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. ஆனால் புலிகளின் மனித விரோத செயல்கள் பற்றி ஒரு தகவல், ஒரு கண்டனம் ஆவது எழுதவில்லையே நீங்கள்? ஏன்? நீங்கள் அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதில் காட்டும் அக்கறை புலிகளை அம்பலப்படுத்துவதில் காட்டவில்லை என்பது தற்செயலானதுதானா அல்லது நீங்களும் வால் முளைத்த இனத்தவர்களுக்கு மறைமுகமான ஆதரவு என்பதா?

துணிவும்; நேர்மையும் இருந்தால் புலிகளை அம்பலப் படுத்துங்கள். அதனைச் செய்ய முடியாது என்றால் மற்றவர்ளைப் பற்றி விமர்சிக்க உங்களுக்கு உரிமை இல்லை! (இந்தக் கடிதத்தை பிரசுரிப்பீர்களா என்பது எனக்குச் சந்தேகம் தான்)

சி. தர்மராஜன்
மன்டல் கிறசென்ற்,
நோர்த் யோர்க்,
ஒன்ராறியோ, கனடா.

# சிங்களக் குடியேற்றங்களின்...

| ஆண்டு | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | இந்திய முஸ்லிம் | பிரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1881 | 935 | 14,394 | - | 5,746 | - | 1,112 | 22,197 |
| 1891 | 1109 | 17,117 | - | 6,426 | - | 1,093 | 25,745 |
| 1901 | 1203 | 17,069 | - | 8,258 | - | 1,911 | 28,441 |
| 1911 | 1138 | 18,913 | 320 | 9,529 | 185 | 1,180 | 29,755 |
| 1921 | 1496 | 18,138 | 448 | 12,662 | 184 | 1,179 | 34,112 |
| 1946 | 15706 | 30,433 | 3362 | 22,136 | 1083 | 3,206 | 75,926 |
| 1953 | 15296 | 34,035 | 3482 | 27,748 | 868 | 2,204 | 83,917 |
| 1963 | 39950 | 51,060 | 2990 | 41,950 | 610 | 1,660 | 1,38,220 |
| 1971 | 55308 | 67,516 | 5739 | 60,698 | 840 | 1,888 | 1,91,989 |
| 1981 | 86,341 | 86,743 | 6767 | 74,403 | | 2,531 | 2,56,790 |

ளைப் பயமுறுத்தி, கலகங்களை உருவாக்குவர்கள்.

ஆயுதப்படைகளும் அரசும் இவர்களின் முயற்சிக்கு பக்கபலமாக நிற்கும். இறுதியில் தமிழ் பேசும் மக்களின் கிராமங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, தாமே அக்கிராமத்தையும் ஆக்கிரமித்துக் கொள்வார்கள். இத்தகைய போக்கு வவுனியாவில் கொக்கச்சானிலும் கல்குடாவின் எல்லைப்பகுதியான வடமுனையிலும், நடைபெறுவதை நாம் அவதானிக்கலாம். வவுனியாவிலுள்ள கொக்கச்சானில் 1981, ஆவணியில் குடியேறச் சென்ற தமிழர்கள் லொறிகளிலும், உழவு யந்திரங்களிலும் வந்த சிங்களக் காடையர்களினால் அடித்து விரட்டப்பட்டனர். இதே போல கல்குடாவின் எல்லைப்புறமான வடமுனையில் அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களினால் 300க்கு மேற்பட்ட தமிழ் - முஸ்லிம் குடும்பங்கள் வடமுனையை விட்டு வெளியேறியுள்ளன. இங்கு குடியேற்றக்காரர்களை குடியேற்றுவதற்கு மகாவலி அபிவிருத்தி அமைச்சின் வாகனங்கள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் அகதிகளுக்கென வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட கூடாரங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இதுவரை 40,000 பேர் வடமுனையில் குடியேறியுள்ளனர் என, தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றினை விட அரசாங்கத் தேவைக்கென அல்லது புனித பிரதேசத்துக்கென அல்லது வேறு பொது நோக்கங்களுக்கென தமிழ் பேசும் மக்களிடமிருந்து, காணிகளை முதலில் சுவீகரித்து சிலகாலம் சென்ற பின்னர் அவற்றை மக்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படுவதாகக் கூறிச் சிங்கள மக்களுக்கு மட்டுமே முழுவதும் கொடுக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக அம்பாறை மாவட்டத்தில் நரைச்சேனைக்கண்டப் பிரச்சினையையும், திருமலை மாவட்ட சேருவல தொகுதி செல்வநகர் பிரச்சினையையும் குறிப்பிடலாம். 1965ம் ஆண்டு அம்பாறை மாவட்ட நரைச்சேனைக் கண்டத்தில் 1000 ஏக்கர் நிலம் கரும்புச் செய்கைக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இதில் கரும்புச் செய்கை கைவிடப்பட்டு 55 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப் பட்டுள்ளன. இதேபோல சேருவல தொகுதியில் சேர்க்கப்பட்ட செல்வநகர் முஸ்லிம் கிராமத்தைச் சேர்ந்த 108 முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான 496 ஏக்கர் நெற்காணிகளை ஒரு மாதப் பயிருடன் பறித்து கடந்த 30.11.85 அன்று களனித் தொகுதியைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு விநியோகிக்க முயற்சி எடுக்கப்பட்டது. இது பொது மக்களின் தீவிர முயற்சியால் நிறுத்தப்பட்டிருந்தாலும் கூட அவை பறிக்கப்படும் அபாயம் இன்னும் நீங்கிடவில்லை.

## கைத்தொழில் குடியேற்றம் :

இந்த வகை சுவீகரிப்பில் திருமலை மாவட்டமே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. திருமலை மாவட்டதில் பாரிய கைத்தொழில் நிறுவனங்களுக்காகவும் உல்லாசப் பயண விடுதிகளுக்காகவும் ஏராளமான தமிழ், முஸ்லீம்களின் காணிகள் பறிக்கப்பட்டுள்ளன. அந்நிய முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட பிரிமா ஆலை, ஆரம்பிக்கவிருக்கின்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் போன்றவற்றிக்கே பெருமளவு காணிகள் பறிக்கப்பட்டன. இந்நிலையங்களில் ஊழியர்களாக பெருமளவு சிங்களவர்கள் சேர்க்கப்பட்டு நிலையத்தைச் சுற்றி அவர்களுக்காக வீடுகள் கட்டப்பட்டு அப்பிரதேசம் முழுவதையுமே சிங்களப் பிரதேசமாக்கும் சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பிரிமா ஆலையில் பிரான்சின் உதவியுடன் 450 வீடுகள் கட்டப்பட்டு சிங்களவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவ் ஆலையில் 379 சிங்கள ஊழியர்களும் 72 தமிழ் ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். இதைவிட உல்லாசப் பிரயாணிகளின் விடுதிகள் அமைப்பதற்காக உப்புவெளி, நிலாவெளிப் பகுதிகளில் ஏராளமான காணிகள் சிங்கள முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

— தொடரும் •

[redacted]

## தென் : நாட...

விமர்சகர்களை திருப்திபடுத்தி விளம்பரத்தை தேடியும் வர்த்தக நோக்கை நிறைவு செய்வதற்குமாக இப்போக்கு நிலவுகின்றது. சிலர் பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்துவது உண்டு.

இன்று கொழும்பில் நாடகம் ஒரு பொழுது போக்கு சாதனமாகவும் வளர்ந்து வருகிறது. திரைப்படங்கள் சிலவற்றைப் பார்த்து அவற்றின் இன்ப நுகர்ச்சிகளை மட்டுமே அனுபவித்து ஆத்ம திருப்தி அடைவது போல் நாடகத்தையும் பார்க்கிறார்கள். 3 மணித்தியாலம் ஒரு நாடகத்தை பார்த்து வெறும் ஆத்ம திருப்தியை மட்டுமே பெறுவதானால் அதனை விட வேறு வியாபாரங்கள் ஏதாவது செய்யலாம்.

பெரும்பாலான நாடகக் குழுக்கள் கொழும்பிலேயே தோற்றம் பெறுவதானால் அப்பிரதேச இயல்புகளும் அங்கு வாழும் மக்களின் உணர்வுகளுமே நாடகங்களில் பிரதிபலிக்கின்றன.

இப்பலவீனமான நிலை மாற்றப்பட வேண்டும். ஆனால் இது கொழும்பில் இருந்து செய்ய முடியாத காரியம். சாதாரண கிராம மக்களை அவர்களது உணர்வுகளை செழுமைப்படுத்துவதானால் கிராமங்களுடன் அவர்களின் உணர்வுகளுடன் நிற்பது இன்றி அமையாதது.

இதற்கு வடக்கு கிழக்கு அரசியல் நிலைமையினையே சிறந்த உதாரணமாக எடுக்க விரும்புகிறேன். கொழும்பை மையப்படுத்திய கூட்டணித் தலைமைகள் தூக்கி எறியப்பட்டு மக்களிடம் புலிகள் செல்வாக்குப் பெற்றுள்ளார்கள். இவர்கள் எவ்வர்க்கத்தைச் சார்ந்து எச்சக்தியாக விளங்குகின்ற போதும் தவறான திசைவழியால் செல்கின்ற போதும் மக்களிடம் நிற்பது என்பது அவர்களின் பலத்திற்கான பிரதான காரணியாக அமைகின்றது.

இன்று நாம் அரசின் அரசியல், சமூக, பொருளாதார நேரடி மறைமுக சுரண்டல்களுக்கும் J.V.P. யின் பலாத்காரத்திற்கும் ஈடு கொடுத்தே நாடகங்களை மேடை ஏற்ற வேண்டி உள்ளது.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை அரசின் இராணுவ அடக்குமுறை நிலவுகின்ற போதும் புலிகளின் மேலாதிக்க போக்கே முனைப்பும் பெற்று உள்ளது. இவற்றில் இருந்து விடுபட்டு மக்கள் தமக்கான சரியான கலாசார அடித்தளத்தை நிறுவுவதன் ஊடாக தமது முன்னோக்கிய நகர்வை ஏற்படுத்த நீண்ட காலம் எடுக்கும் என நான் நினைக்கவில்லை.

இவ்வகையில் எனது மேடை நாடக முயற்சிகள் கொழும்பை மையப்படுத்தாமல் கிராமங்களையும் அடிநிலை மக்களையுமே பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

எனது நாடகத்தில் அரங்கு பற்றிய வரன்முறைக்கு அதன் வடிவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறேனோ அது போலவே அவ்வடிவினூடாக சொல்லப்போகும் கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறேன். வடிவம் கருத்து எனும் இரண்டையும் என்னால் பிரிக்க முடியாது.


எனது முதலாவது நாடகமாக ஹென்றி ஜெயசேன ஆரம்பத்தில் மேடை ஏற்றிய டிப்ரெச்டின் மொழிபெயர்ப்பு நாடகமாகிய "கோக்கேச்சியன் சோக் சேர்க்கிள்" (சுண்ணாம்பு வட்டம்) அமைகின்றது. ஆனால் வேறொருவரின் மொழிபெயர்ப்பினையே "குனுவட்டகே ராட்டய" எனும் பெயரில் அரங்கேற்றினேன்.

85ல் "சீலகே" நாடகத்தை மேடை ஏற்றினேன். இந்நாடகம் சகல அரசியல் கட்சிகளும் மக்களின் பொருளாதாரத்தை மட்டும் அல்லாமல் சிந்தனையையும் சுரண்டி இனவாத மாயைக்குள் அமிழ்த்தியதால் இன்று நாட்டின் ஒரு பகுதி பிரிந்து போகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. என்பதனை சுட்டிக் காட்டுகின்றது. 33 மேடைகள் அரங்கேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களைப் பெற்றாலும் நான் அதிகமான அரசியல் கோஷங்களை அதில் எழுப்பியுள்ளேனா என்ற கேள்வி எழுவதனால் தற்போது அதனை நிறுத்தி உள்ளேன்.

88ம் ஆண்டு மக்ஸ் பிரிட்ஜின் "அன்டோரால்" நாடகத்தழுவலில் உருவான "ருகிறு" (உதிரம்) நாடகத்தை மேடை, யேற்றினேன். இந்நாடகம் எவ்வாறு சிங்கள இனவாதம் மக்களில் பீடிக்கப் பட்டுள்ளது. அதனால் தமிழ் பெண்ணிற்கு பிறந்தவன் என் பதனால் ஓர் இளைஞன் முழு சமூகத்தினாலும் ஒதுக்கப்படுவதையும் அவன் இறுதியில் வன்முறையாளனாக மாற்றப்படுவதையும் சுட்டிக் காட்டுகிறேன். இங்கு அவ்விளைஞன் காதலித்த சிங்களப் பெண்ணையே இராணுவம் கற்பழிக்கும் அளவுக்கு இனவாதம் இறுகி உள்ளமையையும் அவ் இளைஞன் கொல்லப்படுவதை அறிந்த அவனது காதலிக்கு சித்த சுவாதீனம் இன்மை ஏற்படுவதினூடாக இனவாதத்திற்காக சிங்கள கலாசாரத்தையே அழிக்கும் மோச மான நிலை சுட்டிக்காட்டப்ப டுகின்றது.

இவ்வகையில் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட றோகண பெரேரோ சொல்கிறார். இன்று எம்மிடம் உருவாகிவரும் மக்களின் பிரச்சினைகளை மக்களுக்கே விற்று இலாபம் உழைக்கும் நாடக மரபை மீறி புதிய மரபினூடு மக்களின் பிரச்சினைகளை உணர்வு பூர்வமாக அனுகி அதனை நாடக வடிவத்தின் னூடு கொடுப்பதன் மூலம் அவர்களின் சரியான சிந்தனை வளர்ச்சிக்கு வழிசமைப்பதே பிரதான கடமை ஆகும்.

# சரிநிகர்






## ஐ.நா. வழிமொழிந்த அமெரிக்காவின்

# "தர்ம"யுத்தம்

குவைத்திலிருந்து ஈராக் வெளியேறி விட வேண்டுமென ஐ.நா. சபை விதித்த காலக் கெடு முடிவடைந்து யுத்தம் ஆரம்பமாகி விட்டது. அமெரிக்காவின் தலைமையில் 28 நாடுகள் ஈராக்கை எதிர் கொள்கின்றன. தமது சொந்த இராணுவ பலத்திலும் அரபு தேசியவாதத்தின் பலத்திலும், பாலஸ்தீனத்திற்கான தீர்வில் அக்கறையுடன் இருப்பதான அரசியல் பலத்திலும் காலூன்றி நிற்கும் ஈராக்கின் குவைத் மீதான ஆக்கிரமிப்பு அரபு நாடுகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஈராக்கை இந்த இடத்தில் ஆதரிப்பது தமது சொந்த பாதுகாப்புப் பிரச்சினையாகவும், எதிர்ப்பது அரபு தேச மக்களிடமிருந்து தனிமைப்படுவதாகவும் அமையும் என்பதே அச் சிக்கலாகும்
குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த கண்டிக்கத்தக்க விடயத்தில், குவைத்தையும், தானும் ஆக்கிரமிக்கப்படுவேனோ என அஞ்சிய, மொத்த எண்ணை வளத்தில் 25%தை தன்னகத்தே கொண்டிருக்கும் சவூதியையும் பாதுகாக்க முன் வந்திருக்கும் அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் நடவடிக்கையோ, அவற்றுக்கு அங்கீகாரம் அளித்துள்ள ஐ.நா. தீர்மானமோ மொத்த வளைகுடா பிராந்திய மக்களிடையே எத்தகைய கவனத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே சொல்ல வேண்டும். யுத்த பீதியைத் தவிர! இவற்றை விடவும், சதாம் ஹுசைனின் அமெரிக்க எதிர்ப்புக்கே ஆதரவு. இருப்பதாக கொள்ள வேண்டியிருக்கின்றதென்றால் அதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

குவைத் மீதான ஆக்கிரமிப்பைக் குறித்து வந்துள்ள இந்த நாடுகள் எவையும் உண்மையில் குவைத்தின் தன்னாதிக்கத்துக்கு மதிப்புக் கொடுத்தே வந்தன என்று சொல்வதற்கில்லை. இவை குவைத்தினதும் சவூதியினதும் எண்ணை வளத்தின் மீது கண் வைத்தும், அதை நம்பியுள்ள அமெரிக்காவிற்கு. ஆதரவாகவுமே வந்தள்ளன என்றே சொல்ல வேண்டும். ஏனென்றால் இந்த நாடுகள் அனைத்துமே, பிற சிறியநாடுகளின் தன்னாதிக்கத்தை மதிக்காமல் அத்து மீறியவை என்பத வெளிப்படையானது. குறிப்பாக இவை எல்லாவற்றுக்கும் தலைவனாக இருந்து தீவிரமாக செயல்படும் அமெரிக்காவின் அத்து மீறல்களுக்கோ ஒரு அளவுகணக்கு கிடையாது. அப்படி இருக்க இவை ஏன் ஈராக்கை தாக்குவதில் இவ்வளவு அக்கறையாக இருக்கின்றன? காரணம் வேறொன்றுமில்லை, பிரித்தானிய பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் சொன்னது போல "குவைத்தில் விளைவது கரற் கிழங்கு அல்ல, எண்ணை" என்பது தான்.

ஐ.நா. சபையின் தீர்மானம் மிகவும் வியக்கத்தக்க விதத்தில் இவ்வளவு தீவிரமாக இருப்பது இதுவே முதல் தடவை என்று சொல்ல வேண்டும். அனைத்துலக மக்களதும் குரலாக ஒலிப்தாக சொல்லப்படும் ஐ.நா. சபை ஒரு காலத்திலும் அப்படி இருந்ததாக வரலாறு இல்லை.அமெரிக்கா, சோவியத் பிரிட்டன், பிரான்சு, சீனா என்ற ஐந்து பாதுகாப்பு கவுன்சில் நாடுகளை தவிர வேறெந்த நாடுகளுக்கும் இது சேவை செய்ததாக சொல்ல முடியாது. இந்த நாடுகளில் ஏதாவது ஒரு நாடு விரும்பாத பட்சத்தில் எந்த தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் தடுக்கும் "வீட்டோ" அதிகாரம் இவற்றுக்கு இருக்கிறது. இதிலும் பொருளாதார மற்றும் இராணுவ பலம் காரணமாக அமெரிக்காவே ஐ.நா. சபையை வழி நடத்தி வந்துள்ளது என்று சொல்லும்படிக்கே அதன் வரலாறு இருந்து வந்திருக்கின்றது.

ஐ.நா. சபையின் தீர்மானம் என்று சொல்லப்பட்டாலும் நிர ந்தர பாதுகாப்பு கவுன்சில் நாடுகளான இந்த 5 நாடுகளுக்கு அப்பால் எந்த நாடுகளுமே கலந்தாலோசிக்கப்படாமலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அவற்றின் அபிப்பிராயங்களைப் பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவில்லை. இத்தகைய தீவிரமாக தீர்மானம் போட்ட ஐ.நா. சபையானது அமெரிக்கா, கிரினடா, பனாமா, கியூபா, வியட்நாம், லெபனான் போன்ற நாடுகளில் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது எந்த விதமான பேச்சும் இன்றி மௌனமாக இருந்தது யாவரும் அறிந்த உண்மை. பத்தாண்டு காலமாக லட்சக் கணக்கான மக்களைப் பலி கொண்ட வியட்நாமிய ஆக்கிரமிப்பு யுத்தத்தை அமெரிக்கா நடத்தியபோது இந்த ஐ.நா. சபை மௌனமாக இருந்ததும், 2000 பேர் மட்டுமே இறந்த இந்த குவைத் ஆக்கிரமிப்புக்கு மட்டும் இவ்வளவு தீவிரமாக காலக்கெடு விதிப்தும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றுதான். அப்போதுதான் இந்த ஐ.நா. சபையின் அமெரிக்க சார்பு நடுநிலைமை தெளிவாகும். இது மட்டுமல்ல, 1948ல் இஸ்ரேல் ஸ்தாபிக்கப்பட்ட போது பாலஸ்தீனத்தில் குடியிருந்த எட்டு லட்சம் பாலஸ்தீனியர்களை அங்கிருந்து விரட்டியதுமல்லாமல் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழ்ந்து வரும் அவர்களை தொடர்ந்தும் தாக்கிவரும் இஸ்ரேல் மீது ஒரு போதும் இந்த ஐ.நா.சபை இப்படி ஒரு தீவிரப் போக்கை கடைப்பிடித்தது கிடையாது. ஒரு முறை (1975ல்) கூட்டுச் சேரா நாடுகள் இஸ்ரேலை ஐ.நா.விலிருந்து வெளியேற்றக் கோரி கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்த அமெரிக்கா, "இஸ்ரேலை வெளியேற்றினால் தானும் வெளியேறுவேன் என அறிவித்ததுடன், இத்தீர்மானத்தை ஒரு கேடு கெட்ட தீர்மானம் எனவும் வர்ணித்தது. இதைக் கேட்டுக் கொண்டு ஐ. நா. ஸ்தாபனம் மௌனமாகி விட்டதுடன், அதன் பின் இஸ்ரேல் பற்றி பேசுவதையே நிறுத்தி விட்டது.

தென்னாபிரிக்க நிறவெறி அரசின் மேலாதிக்கத்துக்குட்பட்டிருந்த நபீபியாவுக்கு சுதந்திரம் கோரி கிட்டத்தட்ட 125 தீர்மானங்கள் போடப்பட்டன. ஆனால் எந்தத் தீர்மானத்தையும் நிறைவேற்ற விடாமல் இந்த வல்லரசு நாடுகள் பார்த்துக் கொண்டன. தென் ஆபிரிக்கா மீது போடப்பட்ட பொருளாதார மற்றும் ஆயுதத் தளபாடங்களும் மிகச் சாதாரணமாகவே அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளால் மீறப்பட்டன.

எல்லாவற்றிக்கும் மேலாக, இன்று குவைத்தினை 19வது மாநிலமாக ஈராக் அறிவித்திருப்பது போலவே அமெரிக்காவும் போட்டாரிக்கோ என்ற சின்னஞ் சிறிய நாட்டை ஆக்கிரமித்து தன்னோடு இணைத்து 56வது மாநிலமாக்கியது பற்றி இன்று வரை ஐ.நா. ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

ஆக, ஐ.நா. சபையின் தீர்மானம் அமெரிக்க மற்றும் வல்லரசுகளின் சொந்த நலனுக்காகவே இவ்வளவு தீவிரமாக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகின்றது.

குவைத்திலிருந்து ஈராக்கை வெளியேற்ற சொல்லி ஐ.நா. தீர்மானம் போட்ட போது ஈராக் தெரிவித்த பதில் சிரியாவின் லெபனான் ஆக்கிரமிப்புக்கும் இஸ்ரேலின் பாலஸ்தீன ஆக்கிரமிப்புக்கும் முடிவு கட்டப்பட்டால் மட்டுமே குவைத்தினைப் பற்றி பேசலாம் என்பது. ஈராக்கின் செயலில் எந்த நியாயமும் இல்லை. (சதாம் ஹுசைன் ஒன்றும் யோக்கியவான் இல்லை. சதாம் ஹுசைனும் லட்சக்கணக்கான குர்டிஷ் சிறுபான்மை மக்களை இரசாயன ஆயுதங்கள் மூலம் கொன்றொழித்தவர்; தன்னுடைய "பாத்" கட்சியை விட மற்றைய எல்லாக் கட்சிகளையும் இயக்கங்களையும் கொன்று தின்றவர். கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் இடதுசாரிகளை ஒரு மாதத்தில் சுட்டுக் கொன்றவர்).

தட்டிக் கேட்கும் தார்மீக உரிமையும் அமெரிக்காவுக்கோ ஐ.நா.வுக்கோ கிடையாது என்பதை நாம் வலியுறுத்த வேண்டும் மேற்காசியாவில் இஸ்ரேலுக்கு சம பலமுள்ள நாடாக வளர்ந்து இன்று அமெரிக்காவுக்கே சவால் விட தயாராக உள்ள ஒரு நாட்டை அப்படியே விட்டு வைப்பது தமது எண்ணை நலன்களுக்கு உகந்தது அல்ல என்பதால் அமெரிக்காவும், குவைத்தை விட்டு வெளியேறுவது ஈராக்கின் சொந்த பொருளாதார நலன்களுக்கு பாதகமானது என்பதால் ஈராக்கும் யுத்தத்தை நிறுத்துவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே உள்ளன.

மிகப் பிரமாண்டமான படையினை கொண்டிருக்கும் ஈராக்கின் இராணுவ பலமும், அதன் "தேசியவாதம்" வழங்கும் அரசியல் பலமும் காரணமாக அமெரிக்க சனாதிபதி சொன்னது போல் 5 நாட்களல்ல 5 மாதங்களிலும் அவரால் யுத்தத்தை முடித்துவிட முடியுமா என்பது சந்தேகமே.

யுத்தம் ஈராக்கினை தோல்விக்குள்ளாக்கினாலும், அது சாதாரணமாக தோல்வியாக இருக்கப் போவதில்லை. அமெரிக்கா உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளையும் மட்டுமல்ல, சம்பந்தப்படாத நாடுகளையும் பலவீனப்படுத்துவதுடன் உலகப் பொருளாதார நெருக்கடிக்கும் வித்திடப் போகிறது என்னவோ உண்மை.

யார் வென்றாலென்ன, யார் தோற்றாலென்ன முழு உலகமுமே பாதிக்கப்படப் போகும் இந்த யுத்தத்திற்கு உலக மக்கள் ஒரு போதும் ஆதரவளிக்கப் போவதில்லை. இன்னும் தெளிவாக அவர்கள் இவர்களை இனம் கண்டு கொள்வார்கள்.

அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் பரவலாக யுத்தத்தை எதிர்த்து மக்கள் நடாத்தும் போராட்டங்கள் வெற்றி பெற வாழ்த்துவோம்.



சரிநிகர் மாத இதழ், இல, 6, அலோ சாலை, கொழும்பு-3, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்,(MIRJE) சார்பில் ஏ. பாலகிருஷ்ணனால், கொழும்பு-10, லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 25-01-1991